

# தமிழரசு

1-2-77 50 காசு



# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"

''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்"



# தமிழரசு

1—2—1977

மலர் : 7 இதழ் : 15

## இந்த இதழில்...

| | பக்க எண் |
|---|---|
| இந்தியாவின் பெருமையைக் காக்க மக்களைச் சந்திப்போம்! .. | 2 |
| தமிழ்நாட்டின் 1977—78-ஆம் ஆண்டுத் திட்ட முதலீடு .. | 5 |
| புனிதப் பணிகளுக்கு அர்ப்பணித்துக் கொள்வீர்! .. .. .. | 6 |
| இருபது அம்ச — ஐந்து அம்சத் திட்டங்கள் .. .. .. | 9 |
| தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை களின் வளர்ச்சி .. .. | 14 |
| இந்தியப் பொருளாதாரத்தில் தென்னை .. .. .. | 17 |
| படமும் செய்தியும் .. .. | 21 |
| உல்லாச உந்துகளில் செல்லலாம் சுற்றுலா! .. .. .. | 29 |
| வீதி விளக்கிலே படித்து நீதிபதியாக உயர்ந்தவர்! .. | 33 |
| இந்தியாவை உணர்க! .. .. | 36 |
| கள்ளக் கடத்தல் தடுப்பு இயக்கம் .. | 41 |
| அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அனைத்துலகக் கருத்தரங்கு .. | 45 |

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.



## அண்ணலின் நினைவு நாள்

அண்ணல் காந்தியடிகளின் நினைவு நாளையொட்டி 30—1—'77 அன்று சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் பிரார்த்தனையும், பஜனையும் நடைபெற்றன.

## அட்டைப்பட விளக்கம்

கடும் வறட்சி வாட்டிய போதிலும் மனந் தளராமல் தமிழக உழவர் பெருமக்கள் உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பயிரிட்டு, நவீன சாகுபடி முறைகளை மேற்கொண்டதன் பயனாக இந்த ஆண்டில் பொதுவாக நல்ல நெல் மகசூல் கிடைத்துள்ளது என்பதை அட்டைப் படம் சொல்கிறது!

# "இந்தியாவின் பெருமையைக் காக்க மக்களைச் சந்திப்போம்!"



"வானொலியில் உங்களுக்கு நான் உரை ஆற்றிச் சிலகாலம் ஆகிவிட்டது. ஆயினும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நான் தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு வந்ததாலும் தில்லியிலும் மற்ற இடங்களிலும் ஏராளமான பேரைச் சந்தித்து வந்ததாலும் உங்கள் அனைவருடனும் நான் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தேன். உங்களுடைய ஆதரவும், அன்பும், நம்பிக்கையுமே இந்தியாவுக்கு மிகத் திறமையான வகையில் செயலாற்ற எனக்கு உதவியுள்ளன.

''நாடு முழுவதும் நான் மேற் கொண்ட பயணங்களில் நாட்டு மக்கள் தங்களிடமிருந்த தோல்வி மனப்பான்மைக்கும், விரக்தி நிலைமைக்கும் விடை கொடுத்து இருப்பது கண்டு நான் மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். இந்தியன் என்பதில் இப்போது ஒரு புதிய பெருமை ஏற்பட்டுள்ளது. உண்மையில் இப்போது முடிந்த ஆண்டில் தன்னுடைய நோக்க உணர்வையும், தன்னுடைய வலுவையும் நம் தேசம் திரும்பவும் கண்டுபிடித்துள்ளது என்று சொல்லலாம்.

''18 மாதங்களுக்கு முன்பு நம்முடைய நாடு துரதிர்ஷ்டத்தின் விளிம்பில் நின்றது. வன்முறை பகிரங்கமாக பிரச்சாரம் செய்யப்பட்டது. தொழிலாளர்கள் வேலை செய்யாமலும், மாணவர்கள் படிக்காமலும் இருக்கவும், அரசாங்க ஊழியர்கள் தங்களுடைய உறுதிமொழியைத் தகர்த்து எறியவும் தூண்டப்பட்டனர். புரட்சி என்ற பெயரில் தேசம் செயல்படாமலும் செயலற்று இருக்கும் ஒரு போக்குக்குப் பிரச்சாரம் செய்யப்பட்டது. விரைவில் நடக்கவிருக்கும் தேர்தலுக்கு உழைத்திருந்தால் அது ஜனநாயக வழியாக அமைந்திருக்கும்.

''அரசாங்கம் செயல்பட வேண்டிய ஒரு சூழ்நிலையில் தன் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இலட்சிய உணர்வு கொண்ட ஒரு அரசாங்கம் இல்லாமல், வளர்ச்சி அடையும் எந்த ஒரு நாடும் நீடித்திருக்க முடியாது. அந்த நேரத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தற்காலிகமானதே என்று நான் தெளிவுபடுத்தினேன். அவை மெதுவாகத் தளர்த்தப்பட்டு வந்துள்ளன. காவலில் வைக்கப்பட்ட தலைவர்களும், தொண்டர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கொஞ்ச காலத்திற்குக் கடந்த காலத்தில் பத்திரிகைத் தணிக்கைத் தளர்த்தப்பட்டிருந்தது. அந்த நிலையில் மக்களின் நடவடிக்கைகள், கட்சிகளின் நடவடிக்கைகள் குறித்து பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டு வந்தன. வன்முறையும் நாசவேலையும் விட்டொழிக்கப்பட்டிருந்தால் வகுப்புவாதமற்ற கிளர்ச்சிகளுக்கு முயற்சிகள் இல்லாமல் இருந்திருக்குமானால்-முன்னமேயே இந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருக்க முடியும்.

''அபிவிருத்தித் திட்டங்களினால் பெரிதும் பயனடையாமல் இருந்த மக்களுக்கு உதவுவதற்காக, பல கொள்கைகளைத் துவக்கிச் செயல்படுத்துவதற்கு இந்த ஒழுங்குக் கட்டுப்பாடும், நம்பிக்கை உணர்வும் உதவியிருக்கின்றன. மக்களுக்குப் பணியாற்றுவதற்கென்றே வகுக்கப்பட்ட கொள்கைகளுக்குத் தடையாக இருந்தவைகளை அகற்றுவதற்கு அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. நடுத்தர மக்களுக்கு ஒரு சுமையாக இருந்த வரதட்சிணை போன்ற சமூகத் தீமைகளை எதிர்த்துப் போராடுவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். நல்ல ஆரோக்கியமான குழந்தைகளைப் பெறுவதற்கு, இலட்சியம் கொண்ட குடும்பக்கட்டுப்பாட்டுக்காகவும் நடவடிக்கைகள் எடுத்தோம். இந்த விஷயத்தில் நிர்ப்பந்தமோ தொந்தரவோ இருக்குமானால் அது கடுமையாக ஒடுக்கப்படும்.

''நாடு வழக்கமான மாமூல் நிலையிலிருந்து மாறுபட்டிருந்த காரணத்தினால்தான் நெருக்கடிநிலை பிரகடனப்படுத்தப்பட்டது என்பதை உங்களுக்கு நினைவு கூர்கிறேன். நாடு இப்பொழுது ஆரோக்கியமான நிலைக்கு திரும்பிக் கொண்டிருப்பதால் மீண்டும் பழைய நிலைமை ஏற்படாதவாறு நாம் உதவி செய்ய வேண்டும்.

''மாமூல் நிலைமை என்றால் ஒழுங்கான முறையில் தொழில்கள் நடக்க வேண்டும். மக்கள் சில நெறிமுறைகளைக் கடைப்பிடித்து நடந்தால்தான் இது சாத்தியமாகும். ஜனநாயகத்துக்குக் கூட சில விதிகள் இருக்கின்றன. அரசாங்க வேலைகளைத் தடுத்து நிறுத்த முடியாது. மக்களில் எந்தப் பிரிவினரின் நல்வாழ்வுக்கோ அல்லது நாட்டின் பாதுகாப்புக்கோ எவரும் ஊறு செய்யக் கூடாது. இந்தியா வாழ்ந்து சுபிட்சம் அடைய வேண்டுமாயின் பகைமை உணர்வைப் பரப்பக்கூடாது; வன்முறையைக் கடைப்பிடிக்கக்கூடாது; நாசவேலைகளுக்கு ஊக்கமளிக்க முடியாது; பொதுவாழ்வின் தரத்தைத் தாழ்த்த முடியாது.

''பொருளாதார நிலைமை பெரிதும் சீர்திருந்தி விட்டது. பணவீக்கத்திற்கு எதிராக நாம் எடுத்த முயற்சிகளை மற்ற நாடுகள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய விவசாயிகளும், ஆலைத்தொழிலாளர்களும், விஞ்ஞானிகளும், நுட்ப ஊழியர்களும், நிர்வாகிகளும் கடமை உணர்வுடன் செயலாற்றியதன் காரணமாக உற்பத்தி அதிகரித்திருக்கிறது. சிரமங்கள் இருந்தபோதிலும் பொதுமக்களும் ஒத்துழைப்புத் தந்திருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடியினாலும் அரசியல் கிளர்ச்சிகளினாலும் தடைப்பட்டிருந்த பல அபிவிருத்தித் திட்டங்களின் பணியை நாம் மீண்டும் துவக்கியிருக்கிறோம். 20 அம்சத் திட்டமும், 5 அம்சத் திட்டமும் நல்ல பலன்களை அளித்திருக்கின்றன. இன்னும் செய்ய வேண்டியவை எத்தனையோ இருந்தாலும் தன்னம்பிக்கை தோன்றியிருக்கிறது. இளைஞர்களும், பெரியவர்களும் புத்துணர்வு பெற்றிருக்கிறார்கள். குற்றச்சாட்டுகள் இருந்தாலும் வெளிநாடுகளில் நம் தேசத்துக்கு ஒரு புதிய மதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

''விவசாயிகளும், ஆலைத்தொழிலாளர்களும் நமது மக்களில் மற்ற சில பிரிவினர்களும் அனுபவித்து வரும் சிரமங்கள் பற்றி நான் அறிவேன். விரைவான தீர்வுகள் காணுவதற்காக ஒவ்வொரு பிரச்சினையையும் ஆராய்ந்து வருகிறோம். புயல், வறட்சி, வெள்ளம் ஆகியவை சில பகுதிகளில் சிரமங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. இவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்னுடைய அனுதாபங்கள். கடந்த சில மாதங்களில் ஒரு சில பண்டங்களின் விலைகள் சற்று அதிகரித்திருக்கின்றன. ஆனால் அதைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே துவக்கியிருக்கிறோம். அவற்றால் விரைவில் நல்ல பலன் கிட்டும்.

''சென்ற பல ஆண்டுகளிலேயே மிகப் பெரிய அளவிலான தானியச் சேமிப்பை நாம் உருவாக்கியிருக்கிறோம். பொருளாதாரத் துறையில் கஷ்டம் விளைவிக்க விரும்பும் சக்திகள், கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருக்குமாயின் நம்முடைய பொருளாதாரப் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும்.

''நாடு நீண்ட காலமாக இருந்ததைக் காட்டிலும் அதிக ஆரோக்கியத்துடனும், திறமையுடனும், துடிப்புடனும் இன்று விளங்குகிறது. இப்பொழுது நம்முன் உள்ள பிரச்சனை என்னவென்றால் சில தடைகளை விதிக்க நேர்ந்த அரசியல் செயல்முறைகளைக் கணிசமான அளவு மீட்பது எப்படி என்பது தான்.

''மாறுதல் என்பது வாழ்க்கையின் அடிப்படையாகும். உலகமே ஒரு தெளிவற்ற நிலையில் இருக்கின்ற காலம் இது. இன்றைய சமுதாயம் பல ஆபத்துக்களை முன்நோக்கி இருக்கின்றது. இந்த ஆபத்துக்களினால் குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம். எனவேதான் எல்லா மாறுதல்களும் அமைதியான முறையில் ஏற்பட வேண்டும். இதுவே நமது சுதந்தரப் போராட்டமும், மகாத்மா காந்தியும், ஜவஹர்லால் நேருவும் விட்டுச் சென்ற சொத்தாகும்.

# பிரதமர் உரை

''நாட்டு மக்களிடமிருந்து தங்களுடைய அதிகாரங்களை அரசாங்கங்கள் பெறுகின்றன என்ற நம்பிக்கையில் அமைந்ததுதான் நம்முடைய முறை. ஒவ்வொரு குறிப்பிட்ட ஆண்டிலும் நாட்டு மக்கள் தங்களுடைய மேம்பட்ட உணர்வுக்கு—ஆசைக்கு வடிவம் கொடுக்கிறார்கள். கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பதைக் குறிப்பிட்டு அவர்கள் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்கள் அப்படித் தேர்ந்தெடுக்கும் அரசாங்கம் அந்தக் கொள்கைகளை நிறைவேற்றப் பூர்ண ஆயுட்காலம் உடையது.

''1971-ஆம் ஆண்டில் தற்போதைய மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டது. மக்கள் தேர்ந்தெடுத்த, தெளிவான ஆட்சிக்குழு மூலம் பல கூட்டுச் சவால்களை ஒருங்கே நாடு சந்திக்க முடிந்தது. பங்களாதேஷ் சம்பவங்களால், சர்வதேசப் பொருளாதார நெருக்கடியால், 1972-73-ம் ஆண்டின் வறட்சியால், 1974-75-ம் ஆண்டின் அரசியல் சம்பவங்களால் உருவான பல சவால்களை, நாடு சந்தித்துள்ளது. சட்டப்பூர்வமாக மேலும் 15 மாதங்களுக்கு தற்போதைய மக்கள் சபை நீடிக்கலாம்.

''நாட்டின் வலிமைக்கும், நலத்துக்கு மான நம்முடைய திட்டங்களையும் கொள்கை களையும் பாராளுமன்றமும், அரசாங்கமும் நிறைவேற்ற, நாட்டு மக்களிடம் திரும்பச் சென்று, அவர்களின் அனுமதி கோர வேண் டும் என்பதில் நாங்களும் பலத்த நம்பிக்கை கொண்டுள்ளோம்.

''நாட்டு மக்களின் சக்தியில் அசைக்க முடியாத இந்த நம்பிக்கையின் காரணமாக தற்போதைய மக்கள் அவையைக் கலைத்து விடவும், புதிய தேர்தல்களுக்கு உத்தரவிட வும் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு நான் யோசனை கூறினேன். அவரும் இதை ஏற்றுக் கொண்டார். மார்ச் மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கிறோம்.

''அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் அனைத்தும் சட்டப்படியான தங்களது நடவடிக்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துக்கூறும் வகையில் நெருக்கடி நிலைமை விதிகள் மேலும் தளர்த் தப்பட்டு வந்துள்ளன. வன்முறையைக் கை விடுமாறும், இழிவுபடுத்திக் கூறுவது, அவ தூறு பேசுவது ஆகியவற்றை விட்டொழிக்கு மாறும் அரசியல் கட்சிகள் அனைத்தையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். வதந்தி களையோ, கிசு கிசுப்புகளையோ நம்பவேண் டாம். என்றும், அவற்றுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

''ஒவ்வொரு தேர்தலும் நம்பிக்கையின் செயல் ஆகும். குழப்பத்திலிருந்து பொது வாழ்க்கையை தெளிவுபடுத்துவதற்கு அது சந்தர்ப்ப மாகும். ஆகவே இந்தியாவின் நல்ல பெயரைக் காக்கவும், ஒருமைப்பாடு, சமாதானம், முன்னேற் றம் ஆகியவற்றுக்கு நற்பேறு பெற்ற அதன் பெரு மையைக் காக்கவும் உறுதியுடன் தேர்தலில் மக்களைச் சந்திப்போம்.

''உங்களுக்கு என்னுடைய நல்வாழ்த் துக்கள். இந்திய மக்களுக்கு 1977-ஆம் ஆண்டு கூடுதல் வலுவும், நிலைத்த தன்மையும், தொடர்ந்த சாதனையும் நிறைந்த ஆண்டாக அமைய வாழ்த்துகிறேன்.

(நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், 18-1-1977 அன்று அனைத்து இந்திய வானொலியில் ஆற்றிய உரை......)

## பாரதி சாலை



சென்னை உட்ஸ்ரோடிலிருந்து காமராஜ் சாலை வரை செல்லும் பைக்கிராப்ட்ஸ் சாலையை 'பாரதியார் சாலை' என்று மாற்றியழைக்க மாநக ராட்சி செய்துள்ள தீர்மானத்தைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, அனுமதியளித்துள்ளது.




அனைத்து இந்திய 'என்.சி.சி.' இயக்ககங் களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் தமிழ்நாடு 'என்.சி.சி.' இயக்ககம் வெற்றி பெற்று 1977-ஆம் ஆண்டிற்குரிய (சாம்பி யன்) வெற்றிக் கொடியைப் பெற்றுள்ளது. ஏழாவது முறையாக இவ்வெற்றிக் கொடி யைத் தமிழ்நாடு பெற்றிருப்பது சிறப்பிற்குரிய தாகும்.

புதுடெல்லியில் 27—1—1977 அன்று நடைபெற்ற 'என்.சி.சி.' பேரணியில் நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சாம்பியன் கொடியை, தமிழ்நாடு 'என்.சி.சி.' யைச் சேர்ந்த முதுநிலை அலுவலர் திரு. சங்கர் அவர்களிடம் அளித்தார்.

# தமிழ் நாட்டின் 1977-78-ஆம் ஆண்டுத் திட்ட முதலீடு

திட்டக் குழுவின் துணைத் தலைவருக்கும் தமிழ்நாடு ஆளுநருக்கும் இடையே 24-1-'77 அன்று டெல்லியில் நடந்த பேச்சுவார்த்தையில், தமிழ்நாட்டிற்கு 1977-78-ம் ஆண்டுக்கான திட்ட முதலீடு ரூ. 260 கோடி என்று முடிவு செய்யப்பட்டது. இம்முதலீடு, நடப்பு ஆண்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட திட்ட முதலீடாகிய ரூ. 201 கோடியைவிட 30 சதவீதம் அதிகமாகும். தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலாவதற்கு முன்பு, அதாவது 1975-76-ஆம் ஆண்டில் ஆண்டுத் திட்ட முதலீடு ரூ. 143 கோடிதான் என்பது இவ்விடத்தில் குறிப்பிடப்பட வேண்டியதாகும். 1976-77-ஆம் ஆண்டில் இது 40 சதவீதம் அதிகமாக்கப்பட்டு அதாவது ரூ. 201 கோடியாக உயர்த்தப்பட்டது. இந்த வேகம் அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### தனி நபர் முதலீடு

தனிநபருக்கான திட்ட முதலீடு 1975-76ல் ரூ. 35 ஆக இருந்தது. 1977-78ல் ரூ.63 ஆக உயரும்.

### இருபது அம்சத் திட்டத்திற்கு அதிக முதலீடு

20 அம்சத் திட்டத்தில் அடங்கிய பணிகளுக்கு இதற்கு முன் திட்ட முதலீட்டில் 44 சதவீதம் மட்டுமே செலவிடப்பட்டது. தற்பொழுது அது 55 சதவீதமாக இருக்கும்.

### மின்சாரத்திற்கு முன்னுரிமை

மின்சாரம், பாசனம், விவசாயம், தொழில், போன்ற முக்கிய துறைகளுக்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகிறது. 1975-76-ஆம் ஆண்டில் மின்சாரத்திற்கான முதலீடு ரூ. 40 கோடியாகும். குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பின்னர், அதாவது 1976-77-ஆம் ஆண்டில் அது ரூ. 70 கோடியாக உயர்ந்துள்ளது. மின்சாரத்திற்கான முதலீடு 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 95 கோடியளவில் இருக்கும். தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தை விரைவில் முடிக்கவும், பாண்டியாறு புன்னம்புழா நீர்ப்பாசன மின்திட்டத்தின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவும் இதில் முழுமையாக வகை செய்யப்பட்டுள்ளது.

### பாசனத் திட்டங்கள்

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் அன்னியில், காவிரி கழிமுகப் பகுதிகளை நவீனப்படுத்தவும், பெரியாறு-வைகைத் திட்டத்தை நவீனப்படுத்தவும், பாசனத் திட்டங்களில் அதிக வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. சிறு பாசனத் திட்டங்களுக்கும் அதிக அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சமூகநலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம்

சமூக சேவைத் துறையில் பல்வேறு திட்டங்களுக்காக முழு அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1978-ஆம் ஆண்டு நவம்பருக்குள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் உள்ள எல்லாக் குடிசைப் பகுதிகளுக்கும் கழிப்பிடங்கள், குடிநீர், தெருவிளக்கு மற்றும் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. அதே காலத்திற்குள் வீட்டு மனைகள் தேவைப்படும் தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடி மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும். குடிசை வாசிகள், அரிஜனங்கள், மீனவர் ஆகியோருக்கு வீட்டுவசதி அளிப்பதற்காகத் தற்போது செலவிடும் அளவு, தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

### எல்லாக் கிராமங்களுக்கும் நல்ல குடிநீர்!

எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் சுத்தமாகவும், போதுமான அளவும் அளிப்பதற்காக விரிவான குடிநீர் வழங்கு திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் நிறைவேறும். இதற்குப் போதிய நிதி ஆதாரங்கள் அளிக்கப்படுகின்றன.

### புதிய கல்வி முறை

கல்வித்துறையில், பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளிலும் மாணவ-மாணவியரைச் சேர்க்கும் முனைப்பு இயக்கம் தொடர்ந்து கடைப் பிடிக்கப்படும். 1978 மார்ச் மாதத்தில் 10+2+3 ஆண்டுக் கல்வி முறை அமலுக்கு வரும்.

### இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம்

வேளாண்மை முன்னேற்றத்தின் மேம்பாட்டுக்காக மின்சார உற்பத்தியின் அளவை அதிகமாக்கத் தீவிரக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதை ஆளுநர் குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் மேலும் நீர் மின்சாரம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், பழுப்பு நிலக்கரி, நிலக்கரி ஆகியவற்றில் இருந்து கூடுதல் அனல் மின்சக்தி பெற அவசர அடிப்படையில் திட்டமிடவேண்டியுள்ளது. இதன் தொடர்பாக நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் தோண்டும் பணிக்காக விரிவான பரிசோதனைக்கு உடனடியாக அனுமதி தர வேண்டும் என்று ஆளுநர் வற்புறுத்தினார்.

தேசிய, பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் ஆகியவற்றில் மத்திய அரசு செல்லும் முன்னேற்றப்பாதையில் தன்னையும் இணைத்துக் கொள்ளும் வகையில் திட்டங்களைத் தீவிரப்படுத்துவதற்காக, மத்திய அரசின் முழுப் பரிவினையும் நல்ல எண்ணத்தையும் தமிழ்நாடு பெற்றுள்ளது.



# புனிதப் பணிகளுக்கு அர்ப்பணித்துக் கொள்வீர்!

''குடியரசு நன்னாளில் தமிழக மக்களுக்கு எனது மகிழ்ச்சியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய நாட்டின் இப்பகுதியில் இது அறுவடைக் காலம்; நம்முடைய விவசாயச் சகோதரர்கள் நல்ல மகசூல் பெற்று வளம் சேர்த்திட வேண்டுமென வாழ்த்துகிறேன். நாம் கடந்து வந்துள்ள ஆண்டு, நமது குடியரசின் வரலாற்றில், நினைவுகூரத் தக்கதோர் முக்கியமான ஆண்டாகும். சமதர்ம இலட்சியத்தைச் செயற்படுத்துவதில், நமது முன்னேற்ற நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்தும் குறிக்கோளுடன் நமது அரசியலமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. நமது இலட்சியத்தை வலியுறுத்திட, நமது நாடு ஓர் சர்வ சுதந்தரமுள்ள-சமதர்ம-சமயச் சார்பற்ற-ஜனநாயகக் குடியரசு எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

''இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், காந்தியும், நேருவும் கொண்டிருந்த கொள்கைகளையும் இலட்சியங்களையும் நிறைவேற்றி நிலைநாட்டுவதற்காக நாடு கொண்டுள்ள உறுதியைப் புதுப்பித்துக் காட்டுகிறது.

**சமதர்மக் குடியரசு**

''இந்தக் கொள்கைகளை நிலைநாட்ட, கவிஞர் இராமலிங்கம் பிள்ளை கூறியபடி, 'கத்தியின்றி இரத்தமின்றி' நீண்டதோர் போராட்டத்தை நம் நாட்டு மக்கள் நடத்தினர்கள். சமதர்மக் கோட்பாட்டில் அடங்கிய இக்கொள்கைகள், சுரண்டலையும் வறுமையையும் ஒழித்து—அனைவருக்கும் சம உரிமைகளையும் சமவாய்ப்புகளையும் வழங்கும் பேதமற்ற சமுதாயமொன்றை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டவையாகும்.

''பல ஆண்டுகளுக்கு முன்பே ஜவஹர்லால் நேரு அடியிற் கண்டவாறு குறிப்பிட்டார்:

'தனி மனிதர்கள், மக்கள் தொகுதியினர் நாட்டினங்கள் ஆகிய எல்லோருமே உலகில் பெருமளவில் பொருள் சேர்க்கும் பேராசையைக் கொண்டுள்ளனர். இது தகராறுகளுக்கும், போர்களுக்கும் காரணமாக அமைகின்றது. நமது சமுதாயம் முழுவதுமே ஏறக்குறைய இதே அடிப்படையில்தான் அமைந்துள்ளது. இந்த அடிப்படை அகற்றப்பட வேண்டும்; கூட்டுறவு மலர வேண்டும்'.

இன்றுஅரசியலமைப்புச் சட்டத்தில் இத்திருத்தத்தைச் செய்து இந்தியாவை ஒரு சமதர்மக்குடியரசாக ஆக்கியதன்மூலம், பணம் சேர்க்கும் பேராசையையே நோக்கமாகக் கொண்ட நெறிமுறைக் கோட்பாடுகளை எதிர்த்துத் தீவிரமாகப் போராடி, சமூக நீதி, சமத்துவம், சகோதரத்துவம், பரஸ்பரக் கூட்டுறவு ஆகியவற்றின் அடிப்படையிலான நெறிமுறைகளை நிலைநாட்ட விழைகின்றோம்.

**அடிப்படைக் கடமைகள்**

''அடிப்படைக் கடமைகள் பற்றிய புதிய விதி ஒன்றில் மேற்கூறிய நோக்கங்கள் விவரமாக வலியுறுத்தப்பட்டுள்ளன. பல்வேறு கடமைகளில், கீழ்க்கண்டவையும் சேர்க்கப் பட்டுள்ளன.

1. நமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த உன்னத குறிக்கோள்களை மனத்திற் கொண்டு போற்றிப் பின்பற்றி வருதல்.

2. மத, மொழி, பிராந்தியப்பிரிவு வேற்றுமைகளனைத்தையும் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் பொதுவான

சகோதர மனப்பாங்கையும், சமாதான உறவையும் வளர்த்தல்; பெண்டிர் பெருமைக்கு ஊறு விளைவிக்கும் நடைமுறைகளை உதறித் தள்ளுதல்.

3. விஞ்ஞான மனப்பாங்கையும், மனிதாபிமானத்தையும், எதையும் தீர விசாரித்தறியும் உணர்வினையும், சீர்திருத்த நோக்கையும் வளர்த்தல்.

4. முயற்சியிலும், சாதனையிலும் உயர்ந்த கட்டத்தை நோக்கி நாடு தொடர்ந்து முன்னேறிச் செல்லும் வகையில், தனிப்பட்ட மற்றும் கூட்டு நடவடிக்கைத் துறைகள் அனைத்திலும் சிறப்புக்கும் செம்மைக்கும் பாடுபடுதல்.

**புதிய மாற்றங்கள்**

"கடந்த காலத்திலிருந்து நிலவி வந்து கொண்டிருக்கும் பாரம்பரிய, அதிகார வர்க்க, அநீதி மிக்க சமுதாய நியதியை மாற்றி, தற்காலத்துக்கேற்ற பேதமற்ற, தொழில் நுணுக்க, மேம்பாடு மிக்க சமுதாயத்தை உருவாக்க, அரசியலமைப்புச் சட்டத்தில் குடிமக்கள் கடமைகளென இப்போது சேர்க்கப்பட்டுள்ளவை அடிப்படையானவையாகும். பிற்பட்ட வகுப்பினர், அரிஜனங்கள் ஆகிய பெரும் பகுதியினராகிய மக்களை அடித்தளத்தில் தேக்க நிலையில் வைத்துவிட்ட துரதிருஷ்ட வசமான பழைய நிலையை மாற்றி, வரலாற்று வளர்ச்சியில் ஒதுக்கப்பட்ட இம்மக்கள் பகுதியினரைச் சமூகத்தில் முன்னேறிய மக்கள் பகுதியினருக்கு ஒப்பாக மேம்படுத்த நாமெடுத்த முயற்சிகள் அண்மைக் காலங்களில் விரைந்தோங்கி வருகின்றன. இருபது அம்சத் திட்டத்தின் இரு முக்கிய அம்சங்களாகிய நிலச் சீர்திருத்தங்கள் குறைந்த பட்ச ஊதியச் சட்டம் ஆகியவை, நம் கிராமப் பகுதிகளில் இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த உருவானவையேயாகும்.

**குடிமை உரிமைகள் பாதுகாப்பு**

"1976-ஆம் ஆண்டு நவம்பர் 19-ந்தேதி அமலுக்கு வந்த குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் இதற்கு மேலும் வலுவூட்டுவதாக அமைந்துள்ளது. தீண்டாமையை அனுசரிப்பது கைது செய்தற்குரிய குற்றமாகும். நீண்டகாலமாக இருந்து வரும் இந்தப் பாபகரமான பழக்கத்துக்கு முடிவு கட்ட, கடுமையான தண்டனை முறைகளை விதிக்கிறது இச்சட்டம்.

**ஒரு மனிதனின் உயர்வுக்கு உரைகல்லாயிருப்பது அவனது பிறப்பல்ல; சமுதாய நன்மைக்கு அவன் செய்ததென்ன என்பதை வைத்தே அவன் மதிக்கப்பட வேண்டும்.**

"இதுபோலவே ஆடவருக்கும் பெண்டிருக்குமிடையே காலங்காலமாகக் கற்பிக்கப்பட்டுவரும் உயர்வு-தாழ்வினை அகற்றவும் வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேலை செய்யும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதியம் என்றாக்கப்பட்டு விட்டது.; பெண்ணினத்திற்கே ஒரு களங்கமாக இருந்த வரதட்சிணை முறை எல்லோராலும் கண்டிக்கப்படுகிறது.

**வறட்சித் துயர்துடைப்பு**

"நம் தேசிய வாழ்வில் இவை போன்ற சிறப்புமிகு மாறுதல்கள் நேரிட்டுவரும் நேரத்தில், தமிழ்நாட்டில் சிரமமிக்க ஆண்டைக் கடந்து வந்திருக்கிறோம். மாநிலத்தைச் சேர்ந்த அநேக மாவட்டங்கள் தொடர்ந்து இரண்டாவது, மூன்றாவது ஆண்டாக கொடும் வறட்சியைச் சகிக்க நேர்ந்தன. இவ்வாண்டின் ஆரம்பத்தில் சில மாதங்கள் மிக்க கவலையளிக்கக் கூடியவையாக இருந்தன; வறட்சி நிலைகளை நிவர்த்திப்பதிலும், வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொண்டு,பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலையான நன்மை புரிவதிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. வடகிழக்குப் பருவக்காற்று நலம் பயந்து, பெரும்பாலான மாவட்டங்களுக்கு வறட்சி நிலையிலிருந்து நிவாரணமளித்தது.

# ஆளுநர் உரை

**வெள்ளத் துயர்துடைப்பு**

"எனினும், அத்தகைய நலம் பயந்த அதே பருவக்காற்று சென்னை நகரிலும்-செங்கற்பட்டு மாவட்டச் சுற்றுப்பகுதிகளிலும் கொடிய வெள்ளப்பாழை ஏற்படுத்தியது. வெள்ளத்தினால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்தனர்; தொழிற்சாலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலையின்றித் தவிக்க நேரிட்டது. தீயணைப்புப் படையினர், காவல் படையினர், கடற்படை மற்றும் இராணுவப் படையினர், குறிப்பாக தீரமிக்க நமது மீனவர்கள் மீட்புப் பணியில் பெருமளவில் ஈடுபட்டனர். அவர்களுடைய தீர நடவடிக்கைகளும், கடமை யுணர்வுமே பொருட்சேதம், உயிர்ச்சேதம் அதிகமாகாமல் காத்தன; தொடர்ந்து இதற்கு முன்பு முயன்றிராத அளவுக்கு நிவாரணப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு தன்னியக்க நிறுவனங்களும், தரும ஸ்தாபனங்களும், தனிப்பட்டோரும், நிவாரணப் பணிகளுக்கு ஏற்பாடு செய்வதிலும், அரசாங்க நிவாரண நிதிக்கு நன்கொடை திரட்டுவதிலும் சிறப்பான தொண்டாற்றியுள்ளனர். அத்தகைய சேவை புரிந்த தனிப்பட்டோருக்கும், ஸ்தாபனங்களுக்கும் நாம் நன்றிக் கடப்பாடுடையோம். கடந்த காலத் தவறுகளைத் தவிர்க்க அரசு மிகுந்த கவனத்துடன் நிவாரணப் பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது.

**உணவு முனையில் நெருக்கடி இல்லை!**

"தென்மேற்குப் பருவக்காற்று பொய்த்துவிட்டமையாலும், நம் நீர்த்தேக்கங்களில் தண்ணீர் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாலும், 1976-77ல் நமது இலக்காகிய 84 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தியில் பற்றாக்குறை நேரிட்டு 10 லட்சம் டன் வரை குறைந்து விடுமென்று கருதப்படுகிறது. ஆயினும் போதுமான உணவு தானியம் கைவசம் உள்ளதாலும் தெற்குப் பகுதிக்கென அரிசி மண்டலம் வகுத்திருக்கிறோமாகையாலும், உணவு முனையைப் பொறுத்து நெருக்கடியேற்படுவதற்கில்லை.

## ஆண்டுத் திட்டத்திற்கு அதிக முதலீடு!

"இவ்வளவு கஷ்டங்கள் இருந்தும், நம் மாநிலம் 1976-77-ஆம் ஆண்டுத் திட்டத்துக்கென ரூ. 229 கோடி செலவிட்டு நிறைவேற்றி வருகிறது. 1975-76-ஆம் ஆண்டு முதலீட்டைவிட ரூ. 60 கோடி அதிகப்படியானதாகும் இது. 1977-78ஆம் ஆண்டுக்கான நமது திட்ட முதலீடு மேலும் அதிகமாக இருக்குமென்று நம்புகிறேன். ஐந்தாண்டுத் திட்ட முதலீட்டை எல்லா வகையிலும் சிறப்பாக நிறைவேற்றும் நிலையில் இன்று நம் மாநிலம் உள்ளது.

## மின் சக்தி உற்பத்தி

"நீர் மின்சக்தி உற்பத்தியில் பெரும் அளவுக்குப் பற்றாக்குறை நேரிட்டும், இவ்வாண்டு மின்சக்தி உற்பத்தி நிலைமை, கடந்த ஆண்டைக் காட்டிலும் மிகவும் ஆறுதலளிக்கத்தக்க வகையிலேயே இருந்தது. இதற்குக் காரணம் எண்ணூரிலும் நெய்வேலியிலுமுள்ள நமது அனல் மின்சக்தி நிலையங்கள் நன்முறையில் செயல்பட்டதேயாகும். அடுத்த ஆண்டு தூத்துக்குடி மின்சக்தி நிலையம் செயல்படத் துவங்குமென்று எதிர்பார்க்கிறேன்.

## முன்னணியில் தமிழ்நாடு

"20-அம்சத் திட்ட நிறைவேற்றத்திலும் குடும்ப நலத்திட்ட இலக்குகளை எய்துவதிலும் நம் மாநிலம் முன்னணியில் இருந்து வருகிறது. இம்மாநிலத்தில் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 29-ஆகக் குறைந்து விட்டது. இப்போது இந்திய நாட்டில் இதுவே மிகவும் குறைவான பிறப்பு விகிதமாகும்.

## திருப்தியளிக்கும் சாதனைகள்

"நாம் எய்தியுள்ள இதர பெருஞ் சாதனைகள் குறித்தும் திருப்தி அடையலாம். அடகு பிடிப்போரின் அடிமைப் பிடியிலிருந்து இலட்சக் கணக்கான ஏழைமக்களை விடுவித்த கடன் நிவாரண முறை, வறுமையை அகற்ற நாம் மேற்கொண்ட முயற்சிகளில் மிகச் சிறப்பு வாய்ந்ததொன்றாகும். அதே நேரத்தில், பெருவாரியான மக்களைக் கூட்டுறவு முறையினுள் ஈர்க்க முனைப்பியக்கமொன்றும் துவக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 33 இலட்சம் குடும்பத்தினர் இதுவரை கூட்டுறவு முறையினை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

"கல்ராயன் மலையை வெளியுலகுடன் தொடர்புபடுத்தி, அங்கு வாழ்ந்து வரும் ஆயிரக் கணக்கான மலைவாசிகளுக்கு விடுதலையளித்து, அப்பகுதியில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு ஏற்பாடு செய்தது, நம் மாநில முழுவதையும் நவீன வளர்ச்சித் திட்டங்களோடு கூடிய நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரும் நம் முயற்சிகளைக் குறிக்கும் முடிவான அத்தியாயமாகும்.

## சார்நிலை நீதி மன்றங்களில் தமிழ்!

1976 நவம்பர் 14-ஆம் தேதி முதல் தமிழே சார்நிலை நீதி மன்றங்களின் மொழியாக இருத்தல் வேண்டுமென ஆணை பிறப்பித்தது, நீதி வழங்கும் முறையினை சாதாரண மக்களும் எளிதில் புரிந்து கொள்ள வேண்டுமென்ற நீண்டநாள் தேவையைப் பூர்த்தி செய்ததாகும்.

## நிர்வாகத்துறையின் வளர்ச்சி

"பொருளாதார-சமுதாய வளர்ச்சிக்கான முயற்சிகள் தீவிரமாக்கப் பெற்றுவரும் அதே நேரத்தில், நிர்வாகத் துறையின் அபிவிருத்திக்கான வழிவகைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களின் தேவைகளை முறையாகவும் முழுமையாகவும் கண்டறிந்து நிறைவேற்றும் வகையிலும், இலஞ்ச ஊழல் முறைகளை ஒழித்துக் கட்டவும், மக்களை அச்சுறுத்தும் தன்மையை கீழ்மட்டங்களில் இல்லையென்றாக்கவும் நிர்வாக இயந்திரம் இயக்கப்படும். நிர்வாகத்துறையில் வளர்ச்சி காண வேண்டுமாயின், தொடர்ந்த முயற்சிகள் நீண்டநாட்களுக்குத் தேவை. நாம் இப்போது நல்லதொரு ஆரம்பக் கட்டத்தை மேற்கொண்டு விட்டோம்.

## சமுதாய மறுமலர்ச்சி

"தேசியத் திட்டங்களாகிய பொருளாதார வளர்ச்சி, உற்பத்திப் பெருக்கம், விலைவாசியைக் கட்டுப்படுத்தல், மற்றும் சமுதாய மறு மலர்ச்சிக்கான இதரமுறைகள் ஆகியவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரும் ஆண்டாகத் திகழ்ந்தது கடந்த ஆண்டு. அடுத்து வரும் இவ்வாண்டில், நமது இப் பெருநாடு மேலும் வளர்ச்சியுற்றோங்க கட்டுப்பாடான முயற்சியை மேற்கொள்ள இருக்கிறோம்.

## பிரதமர் வேண்டுகோளை அனுசரிப்பீர்!

"நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். அதையனுசரித்து, நியாயமான பேச்சுச் சுதந்தரம், பத்திரிகைச் செய்தி வெளியீட்டுச் சுதந்தரம், கருத்துச் சுதந்தரம் ஆகியவற்றுக்கு உத்தரவாதமளித்து, அவசியமான அனைத்து வகையிலும் விதிகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன. தேசிய உணர்வுக்கு மாறான பிரச்சாரம், தூஷணை, விரோத மனப்பான்மை ஆகியவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டுமெனப் பிரதம மந்திரி அவர்கள் விடுத்த வேண்டுகோள், முழுமையாக அனுசரிக்கப்பட வேண்டும். தேர்தல் நடவடிக்கைகளுக்காகவே விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன வென்பதை வலியுறுத்த விரும்புகிறேன். உற்பத்திப் பெருக்கத்திலோ, ஒழுங்கு-கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதிலோ நமது முயற்சிகளில் தளர்ச்சியெதுவும் இருத்தல் கூடாது. உற்பத்தியிலும், பொதுமக்கள் உபயோகத்துக்கான பொருள்கள் விஷயத்திலும், சமூக வாழ்விலும் சீர் குலைவு ஏற்படுவதையும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நிலவும் அமைதிக்குப் பங்கம் விளைவதையும் அனுமதிக்க முடியாது.

## தமிழக மக்களுக்கு வாழ்த்து

தமிழ்நாட்டு மக்கள் புனித காரியங்களுக்குத் தங்களை மேலும் அர்ப்பணித்துக் கொண்டு, மிக்க பயன்தரத்தக்க முயற்சிகளில் ஈடுபட்டு, பெருஞ்சாதனைகள் புரியும் ஆண்டாக, இது திகழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

[குடியரசு நாள் விழாவன்று (26-1-1977) தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் வானொலியில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.]

# இருபது அம்ச—ஐந்து அம்சத் திட்டங்கள்

—சங்கர் கோஷ்
மத்திய திட்ட ராஜாங்க அமைச்சர்

நாட்டின் முன்னே இன்றைக்கு மூன்று அடிப்படைத் திட்டங்கள் உள்ளன. தேசீய அபிவிருத்தி கவுன்சில் இறுதி முடிவு செய்த 5-வது திட்டத்தில் காணப்படும் பல திட்டங்கள்-முதல் திட்டம்; இரண்டாவது 20 அம்சத் திட்டம்; மூன்ருவது-5 அம்சத் திட்டம்.

ஐந்தாவது திட்டத்துடன் செயல்படுத்தப்பட்டுவரும் 20 அம்சத் திட்டம், 5 அம்சத் திட்டம் இரண்டும் நாட்டு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் வழி வகுக்கும் தேசீயக் கொள்கையாகும். 5 ஆண்டுக் காலத்தில் நாட்டின் முன்னேற்றத்துக்கு மேற்கொள்ளப்படும் திட்டங்களின் பட்டியலை உள்ளடக்கியது 5 ஆண்டுத் திட்டம். துரித பொருளாதார வளர்ச்சி-சமூக நீதியில் நம்முடைய முயற்சிகளைத் தீவிரமாக்கும் பல திட்டங்களைக் கொண்டது 20 அம்சப் பொருளாதாரத் திட்டம். மேற்கண்ட துறைகளில்-நாட்டு நிர்மாணப் பணிகளில் நாம் அவசரமாக அவசியமாக மேற்கொள்ள வேண்டிய திட்டங்களில் முக்கியத்துவம் பெற்றவை 5 அம்சத் திட்டங்கள்.

'புதிய பொருளாதாரத் திட்டமும், நெருக்கடி நிலையும்' பண வீக்கத்துக்கு எதிரான போரில் நாம் வெற்றி பெற வைத்துள்ளன. நாட்டில் அவசரநிலை பிரகடனத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஏராளமான தீவிர நடவடிக்கைகளும், கடுமையான கொள்கை நடவடிக்கைகளும், உற்பத்தியில் குறிப்பிடத்தக்க உயர்வுக்கும் விலைவாசி நிலைமையிலும் பெரிதும் உதவியுள்ளன. இவை தவிர, பணவீக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள், கள்ளச் சந்தைக்காரர்கள், கொள்ளை லாபக்காரர்கள்; கடத்தல் காரர்கள் ஆகிய பொருளாதாரத்துக்கு தீங்கிழைப்பவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.





இதுவரை இல்லாத அளவுக்கு இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி உயர்ந்துள்ளது!

விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் குறிப்பிடத்தக்க உயர்வு காணப்பட்டுள்ளது. 1974-75ம் ஆண்டில் 10.1 கோடி டன்னாக இருந்த உணவு உற்பத்தி கடந்த ஆண்டு 11.8 கோடி டன்னாக உயர்ந்து, இதுவரை இல்லாத சாதனை படைத்துள்ளது. 1974-75ம் ஆண்டில் 2.5 சதவீதமாக இருந்ததைக் காட்டிலும் 75-76ம் ஆண்டில் தொழில்துறை உற்பத்தி 5.7 சதவீதம் உயர்ந்துள்ளது. 1976, ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை சுமார் 12.6 சதவீதத் தொழில்துறை உற்பத்தி உயர்வு கடந்த ஆண்டில் இதே

காலத்தைவிடக் கூடுதலாகும். 1974-75-ல் 0.2 சதவீதமே உயர்வு கண்ட மொத்த தேசீய வருமானம் 1975-76ம் ஆண்டில் 6.5 சதவீதமாக உயர்ந்தது.

நாட்டில் ஸ்திரத்தன்மைக்கு அபாயம் விளைவிக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட அழிவு சக்திகள், சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்கவே நெருக்கடி நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டது. அரசியல் ஸ்திரத்தன்மைக்குப் பொருளாதார வளர்ச்சியே சிறந்த உத்தரவாதம் என்பதை உணர்ந்து, நெருக்கடி நிலைமைக்குப் பின்னர் உடனடியாக 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை பிரதமர் அறிவித்தார். இத்திட்டம் இலட்சோப இலட்சம் மக்களின் மத்தியில் புதிய நம்பிக்கைகளையும், நாட்டின் பொருளாதாரத்தில் புதிய ஆற்றலையும் மலரச் செய்துள்ளது.

நிலச் சீர்திருத்தம், கிராமக் கடன் ஒழிப்பு, கொத்தடிமை ஒழிப்பு, விவசாயத் தொழிலாளர்களின் நிலைமையைச் சீர்படுத்துதல் ஆகியவை இந்த இருபது அம்சத் திட்டத்தின் சில முக்கிய அம்சங்கள்.

சமநில வினியோகத்தின் மூலம் கிராமப் பொருளாதாரத்தில் தரமான மாற்றம் காணலாம் என்பது தெரிந்ததே. நிலமற்றவர்களுக்கு உபரி நிலங்கள் வினியோகத்திட்டம் 20 அம்சத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 10 இலட்சம் ஏக்கர் வினியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் 6 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். இவர்களில் ஏராளமான பேர் ஷெட்யூல்டு வகுப்பைச் சேர்ந்தவர்களும், மலையக மக்களும் ஆவர். சம நில வினியோகத்தின் மூலம் உற்பத்தித்திறன் உயர்வு பெறுகிறது. ஏழை விவசாயிகள் பலன் பெறுகிறார்கள்.

20 அம்சத் திட்டம் அமல்படுத்தப்பட்டதன் பலனாக நாட்டில் கால காலமாய் தொடர்ந்திருந்து வந்த கொத்தடிமை முறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 1976 அக்டோபர் முடிவுக்குள்ளாக சுமார் 88,600 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொத்தடிமையில் இல்லாவிட்டாலும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி வழங்கப்படவில்லை. நிலமற்ற தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி 20 அம்சத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அடகுக்கடைக்காரர்களிடம் கடன்பட்டு, துயர்பட்ட நிலமற்ற தொழிலாளர்கள், நடுத்தர, சிறிய விவசாயிகள், கிராமப்புற கைவினைஞர்கள் ஆகியோருக்கு 20 அம்சத் திட்டத்தின் மூலம் கடனிலிருந்து நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கடன்களைப் பல மாநிலங்களும் ஒழித்துள்ளன. மாற்று ஏற்பாடாக வர்த்தக பாங்குகள், கூட்டுறவுகள், புதிதாக அமைக்கப்பட்டுவரும் கிராமப்புற பாங்குகள் மூலம் அவர்களுக்குக் கடன் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவில் இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன.

நிலமற்ற தொழிலாளர்களுக்கும், சமூகத்தில் நலிந்த பிரிவினர்களுக்கும் சுமார் 71 இலட்சம் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன. வீடுகளை நிர்மாணிக்கும் திட்டங்களை சில மாநிலங்களும், வீட்டுமனைகள் அபிவிருத்திக்கான திட்டங்களைச் சில மாநிலங்களும் மேற்கொண்டிருக்கின்றன. 3 இலட்சத்து 29 ஆயிரம் வீடுகள் எற்கெனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

கைத்தறித் தொழிலைப் பொறுத்த மட்டில் அதன் வளர்ச்சி, மேம்பாட்டுக்கென 17 தீவிர அபிவிருத்தித் திட்டங்களுக்கும், 19 ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

தரத்தில் சிறந்த மலிவு விலைத் துணி, முன்பைக் காட்டிலும் இப்போது தாராளமாகக் கிடைக்கிறது. இந்தத் துணிகள் வினியோகத்துக்கெனச் சில்லறை நிலையங்கள் திறப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது; இதனால் 1974-ல் 19,000 ஆக இருந்த சில்லறை நிலையங்களின் எண்ணிக்கை இப்போது 47,000 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 37,000 சில்லறை நிலையங்கள் கிராமப்புறங்களில் அமைந்துள்ளன.

கிராமப்புற மக்களுக்குக் கடன் உதவி அளிக்கப்படுகிறது.



இந்தியாவில் 1976 அக்டோபர்வரை 88,600 பேர்கள் கொத்தடிமையில் இருந்து விடுதலை பெற்றுள்ளனர்!



அத்தியாவசியப் பொருட்கள் சீரான வினியோகத்தில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் தீவிரமாக கவனம் செலுத்தி வந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ்-இளைஞர்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு கல்லூரி மூலமாக அத்தியாவசியப் பொருட்களைக் கட்டுப்பாடான விலையில் பெருமளவு வினியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்பைக்



இந்தியாவெங்கும் 71 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன !

காட்டிலும் தற்போது பாடப் புத்தகங்களும், பயிற்சிக்கான நோட்டுப் புத்தகங்களும் தாராளமாகக் கிடைக்கின்றன. சலுகைக் கட்டணங்களில் அச்சடிக்கப்பயன்படுத்தப்படும் வெள்ளைக் காகிதங்கள் வழங்கப்பட்டிருப்பதால் பாடப் புத்தகங்கள் விலையில் குறைவு காண்பது எளிதாக உள்ளது. ஏழை மாணவர்களுக்கு, குறிப்பாக ஷெட்யூல்டு வகுப்பு, மலைவாழ் வகுப்பு, சமூகத்தின் இதர பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் புத்தக பாங்குகள் துவக்கப்பட்டுள்ளன.

1976-ம் வருடத்திய நகர்ப்புற நில (உச்சவரம்பு, கட்டுப்பாடு) சட்டம் 1976, பிப்ரவரி 17-ஆம் தேதி அமலுக்கு வந்தது. 20 அம்சத் திட்டத்தின் கீழ் இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டது.. ஒரு நபருக்குச் சொந்தமாக இருக்கும் காலி நிலத்தைப் பொறுத்தமட்டில் ஒரு உச்ச வரம்பு இச்சட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உபரியான காலிநிலம் மாநில அரசிடம் ஒப்படைக்கவும் வழி காணப்பட்டுள்ளது.

பம்பாய், கல்கத்தா, சென்னை, தில்லி, பூனா, ஆமதாபாத், ஹைதரபாத், கான்பூர், பெங்களூர், ஜெய்ப்பூர், நாக்பூர் ஆகிய நகரங்களில், சொகுசு-ஆடம்பர மாளிகைகளில் கணக்கில் காட்டப்படாத முதலீட்டுத் தொகையைக் கண்டுபிடிக்க விசேஷ படை அமைக்கப்பட்டது. இப்படை மூலம் நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவில் ஏற்கெனவே மதிப்பிடப்பட்ட சொத்துக்களில் சுமார் 18 கோடி, கணக்கில் காட்டப்படாத முதலீடாகவும் குறைவாகவும் மதிப்பிடப்பட்டிருந்தது தெரிய வந்தது.

அந்நியச் செலாவணி மோசடி-கடத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடத்தல்காரர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கடத்தல்காரர்கள், அந்நியச் செலாவணி தில்லுமுல்லுக்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய ஒரு சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

20 அம்சத் திட்டத்தின் கீழ், வருமான வரி செலுத்தும் விதியிலிருந்து விலக்கு அளிக்கும் வரம்பு ரூ. 6000-லிருந்து ரூ. 8,000மாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த விலக்கால் சுமார் 7 இலட்சத்து 30 ஆயிரம் பேர் பலனடைந்து உள்ளனர். மேலும், ரூ. 8,000 முதல் ரூ. 15,000 வரை வரி செலுத்தக்கூடிய வருமானம் பெறக்கூடிய நபர்களில் 7 இலட்சத்து 30 ஆயிரம் பேர் வருடம் ஒன்றுக்கு ரூ. 45 முதல் ரூ. 264 வரை பலனடைந்துள்ளனர்.

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு 20 அம்சத் திட்டத்தின் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம். உற்பத்தி, உற்பத்தித் திறன் அபிவிருத்தி செய்யும் ஓர் உணர்வு இதன் மூலம் தொழிலாளர்க்கு ஏற்படுகிறது. தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு அளிக்கும் திட்டத்தின் மூலம்-நாட்டில் தொழில் உறவு நிலைமையிலும், தொழிற்சாலை உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள், சிறிய பாசனத் திட்டங்கள் ஆகியவை மூலம் 1975-76ஆம் ஆண்டில் மேலும் 19.4 இலட்சம் ஹெக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வசதிக்கு வழி காணப்பட்டுள்ளது. 1976-77ம் ஆண்டு திட்டத்தில் பாசனங்களுக்கென (சிறிய பாசனம் உட்பட) ரூ. 769.07 கோடியும், மின்சாரத்துறைக்கென ரூ.1453.4 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்

அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்கள் நாடெங்கும் சீராக வினியோகிக்கப்படுகின்றன!





கள்ளக் கடத்தல்கள் குறைந்தன! கணக்கில் காட்டாத முதலீடுகள் சிக்கின!

டுள்ளது. இது 1975-76ம் ஆண்டைக் காட்டிலும் பாசனத்துறையில் 43 சதவீதமும், மின்சாரத் துறையில் 31 சதவீதமும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நில நீரை உபயோகத்துக்குக் கொண்டு வருவதற்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்ட காலத்தில் நாட்டில் உள்ள மேலும் 5 இலட்ச சதுர கிலோ மீட்டர் பரப்பில் முறைப்படி நீர் நில ஆய்வுகளை மேற்கொள்ளும் ஒரு திட்டத்தை மத்திய நில, நீர் வாரியம் மும்முரமாகச் செயல்படுத்தி வருகிறது.

கச்சாப் பொருட்களை, சிறப்பாக-முழுமையாகப் பயன்படுத்துவதைப் போல, மனித சக்தி அபிவிருத்திக்கு வழிகாண்பது-நம்மைப்போல் உள்ள வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கு இன்றியமையாததாகும். இந்தத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்னால் மொத்தம் 1.1 இலட்சம் இடங்களில் சுமார் 69,236 அப்ரெண்டிஸ் இடங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தன. 1976, டிசம்பர் மத்தியில் 1,55,823 இடங்களில் 1,54,258 இடங்களுக்கு 'அப்ரெண்டிஸ்' பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

இதில் 34,000க்கும் மேற்பட்ட 'அப்ரெண்டிஸ்கள்' ஷெட்யூல்டு வகுப்பு, மலையக வகுப்பு, சிறுபான்மை இனம், உடல் அங்ககீனம், சமூகத்தில் நலிந்த பிரிவு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

நாடு முழுவதும் சாலைப் போக்குவரத்துக்கென தேசிய பர்மிட் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. 5,300 தேசிய பர்மிட்டுக்கள் வழங்க இத்திட்டம் வகை செய்துள்ளது.

பிரதமர் அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்தால் நாடு முழுவதும் ஊக்க உணர்வும், உற்சாகமும் காணப்படுகிறது. விடுதலைக்கும், மாற்றத்துக்கும் வித்திடும் ஓர் உயரிய திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உண்மையில் தேச வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உருவாக்கியுள்ளது இத்திட்டம். துரித வளர்ச்சிக்கும், சமூக நீதிக்கும் அடிகோலியுள்ளது.

திரு சஞ்சய் காந்தியின் 5 அம்சத் திட்டமும் ஊக்கமூட்டும் ஒரு திட்டமாகும். குடும்பக் கட்டுப்பாடு, கல்வி அறிவு பரப்புதல், மரம் நடுதல், தூய்மை பராமரித்தல், ஜாதிக் கொடுமை-வரதட்சிணை எதிர்ப்பு ஆகிய 5 அம்சத் திட்டம் பிரதமர் திருமதி



தொழில் பழகுநர் திட்டத்தில் அரிசன, ஆதிவாசியினர்க்கே முதலிடம்!

இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த 20 அம்சத் திட்டத்தின் துணைத் திட்டமாகும். 1976, நவம்பரில் கௌஹாத்தியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பேசுகையில் 'மற்றத் திட்டங்களின் வெற்றிக்கு உண்மையிலேயே அடிப்படையானது '5 அம்சத் திட்டம்' என்று குறிப்பிட்டார்.'

வறுமையை ஒழிக்கும் பிரச்சினை-மக்கள்தொகை வளர்ச்சி பிரச்சினையுடன் இணைந்த ஒன்று. பெருகி வரும் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்படாவிட்டால் வளர்ச்சியை துரிதப்படுத்தும் நம் திட்ட முயற்சிகள் வெற்றிபெற மாட்டா. நாடு சுதந்திரம் பெற்றது முதல் இந்தியாவில் 25 கோடி மக்கள் பெருகி இருக்கிறார்கள். ஆண்டுக்கு 1.2 கோடி என்ற வீதத்தில் இந்திய மக்கள் தொகை பெருகி வருகிறது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த நாம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 14.5 இலட்சம்; இப்போது 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 497 கோடியாக ஆகியிருப்பதிலிருந்து நாம் குடும்பக்கட்டுப்பாட்டுக்குக் காட்டிவரும் முக்கியத்துவத்தைத் தெளிவாக அறியலாம்.





நாடு செழிக்க மரம் நடுவீர் !

முழுக்க முழுக்க மக்கள் இயக்கமாக ஏற்கப்பட்டால்தான் உண்மையில் குடும்பக்கட்டுப்பாடு வெற்றி பெறும். ஆகவே குடும்பக்கட்டுப்பாட்டை மக்கள் இயக்கமாக மாற்ற 5 அம்சத் திட்டம் உதவி வருகிறது.

1975-76ஆம் ஆண்டில் 26 இலட்சத்து 70 ஆயிரம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் முடிக்கப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 97 சதவீதம் உயர்வாகும். 1976-77 ஆம் ஆண்டுக்கு 43 இலட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்படவேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் ஆறு மாத காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு சிகிச்சைகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஜாதிக்கொடுமையை எதிர்க்கும் போராட்டம் இன்னொரு அம்சம். மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற சிறந்த தலைவர்கள் ஜாதிக்கொடுமையைக் களையவும், ஷெட்யூல்டு வகுப்பு, மலையக மக்களின் முன்னேற்றத்துக்கும் அரும்பாடுபட்டு வந்துள்ளனர். இந்திய மக்கள் தொகையில் 22 சதவீதம் உள்ள ஷெட்யூல்டு வகுப்பு, மலையக வகுப்பைச் சேர்ந்த 8 கோடி மக்கள், பின்தங்கிய பிரிவினர் ஆகியோர் சமூகத்தில் நலிந்த பிரிவினராவர். அவர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கென பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜாதிக்கொடுமையைக் களையவும் இந்தத் திட்டங்கள் பரவலான வெகுஜன ஈடுபாடின்றி அரசு முயற்சிகளால் மட்டுமே வெற்றி பெறுவது என்பது முடியாது. வெகுஜன இயக்கமாக-மாற்றும் பணி இளைஞர்கள் கையில் உள்ளது.

நம் சமூகத்தில் நிலவிவரும் இன்னொரு மோசமான சமூகக் கேடு, வரதட்சிணை. பெண்களுக்கு எதிரான வேற்றுமைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படா விட்டால் நாடு வளம் பெறும் என்பது முடியாத காரியம். வரதட்சிணைக் கொடுமையை எதிர்க்கும் போராட்டத்தில் இளைஞர்கள் இன்று முன்னணியில் நிற்கிறார்கள்.

நாட்டில் சமூக, பொருளாதார வளர்ச்சி துரிதப்படுத்துவதற்கு வழிவகுக்கும் இன்னொரு அம்சம் நாட்டு மக்களிடையே கல்வி அறிவு பரப்புவது ஆகும். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு 10 பேரிலும் 3 பேரே கல்வி அறிவு பெற்றிருப்பதாக 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்மூலம் தெரிய வந்தது. பெண்கள், சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினர். கல்வி அறிவு பெற்றிருக்கும் விகிதம் மிகவும் குறைவு. இந்தச் சூழ்நிலையில் நாட்டு மக்களிடையே கல்வி அறிவூட்டும் பணியில் 5 அம்சத் திட்டத்தின் மூலம் இளைஞர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இத்திட்டங்களுக்கு இடையில் மரம் நடுவதையும் இளைஞர்கள் தீவிரமாக மேற்கொண்டுள்ளனர்.

நாம் வசிக்கும் நகரங்கள், பட்டினங்கள், கிராமப்புறங்களை சுத்தமாக வைத்திருக்க ஏராளமான பணம் செலவு ஆகப் போவதில்லை. சிறிதளவு முயற்சியும், சுற்றுப்புறச்சூழல் அழகாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வும்தான் தேவை.

இன்றைக்கு நம் முன்னே இருக்கும் இரு மகத்தான பணிகள்-ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுதல்; 20 அம்சத் திட்டத்தை அமல்படுத்துதல் ஆகும். சமூகமும்—பொருளாதாரமும் ஒன்றோடொன்று பிணைந்தவை. பொருளாதார முன்னேற்றம் காணப்பட வேண்டுமானால் -5 அம்சத் திட்டத்தில் இணைந்த சமூக, பொருளாதார நோக்கங்கள் செவ்வனே நிறைவேற்றப்படவேண்டும்.



வரதட்சணைக் கொடுமையை எதிர்ப்பதில் மாணவிகள் முன்னோடியாக உள்ளனர்!

இந்த இயக்கங்கள் அனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை மட்டுமல்ல, அத்தியாவசியமானவையாகும். இந்த இயக்கங்கள் அனைத்தும் தேச நிர்மாணப் பணியின் முழு முயற்சிகளில் ஒரு பகுதியே ஆகும்.

நன்றி: பத்திரிகைத் தகவல்
அலுவலகம், சென்னை.



# தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் வளர்ச்சி!

**ஜி. எஸ். தில்லான்,**
மத்திய கப்பல் மற்றும் போக்குவரத்து அமைச்சர்.

"**தே**சிய நெடுஞ்சாலை 47-ல் அமைந்துள்ள ஈரோடு நகருக்கு அருகில் காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்தப் புதிய பாலத்தின் திறப்பு விழாவில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

"தற்போதுள்ள பழைமையான பாலம் நலிந்தது. மிகவும் குறுகலானது. இதனுல் வாகனப் போக்குவரத்து சுலபமாக இயங்குவதில் இடையூறுகள் ஏற்பட்டன. குமாரபாளையம் பாதையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம் இந்த தேசிய நெடுஞ்சாலையில், சுலபமான துரிதவேக வாகனப் போக்குவரத்துக்கு வழி காணும்.

"நாட்டில் சாலை அமைக்கும் பணியில் தேசிய நெடுஞ்சாலைகள் துறை சீரிய கவனம் செலுத்தி வருவது அனைவரும் அறிந்ததே. தமிழ்நாட்டில் 1,744 கிலோ மீட்டர் நீளத்திற்கு 8 தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாலம் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை 47-ம் இதில் அடங்கும்.

**தேசிய நெடுஞ்சாலைகளின் வளர்ச்சி**

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திக்கென ரூபாய் 41 கோடி மொத்த செலவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. இதில் தற்போதுவரை ரூபாய் 35.66 கோடி மதிப்புள்ள 540 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் இதுவரை 366 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு ரூபாய் 29 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதுவரை தேசிய நெடுஞ்சாலைத் துறையின் கீழ் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 1,744 கிலோ மீட்டர் நீள சாலையில் 1,044 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இருவழிப் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் அகலப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள நீளச் சாலைகளையும் இருவழிப் போக்குவரத்துக்கு ஏற்ப அகலப்படுத்தும் பணிகள் பல்வேறு முன்னேற்ற கட்டங்களில் உள்ளன. இந்த இலக்கை அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் எட்டிப் பிடிப்போம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"சாலைகளை அதிகப்படுத்தும் பணிகள் நீங்கலாக, நலிந்த நடைபாதைகளை வலுப்படுத்துதல், நெருக்கடி மிகுந்த நகர்ப் பகுதிகளில் பாதைகள் அமைத்தல், ரயில் பாதையைக் குறுக்கிடும் சாலைகளை மாற்றி அமைத்தல் ஆகிய பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

**பாலங்கள்**

"ஆறுகளின் குறுக்கே பாலங்களை அமைத்தலும் தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலம் அரசாங்கம் மேற்கொண்டுள்ள ஒரு பணியாகும். நலிந்த குறுகிய பாலங்களை சீரமைத்தல், 'பாம்பன்' போன்ற பெரிய பாலங்களை அமைத்தல் ஆகிய பணிகள் இதில் உள்ளடங்கும். இந்தப் பாலம் திறக்கப்படுவதன் மூலம் சிறந்த தகவல் வசதிகளுக்கும் வழி காணப்படும்.

**1976-77-ம் ஆண்டிற்கான ஒதுக்கீடு**

"தேசிய நெடுஞ்சாலைகளை பொறுத்த மட்டில் 1976-77-ஆம்





குமாரபாளையம் - பவானிக்கு இடையில் காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாகக்கட்டப்பட்டுள்ள பாலத்தை நமது இந்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், நமது இந்திய கப்பல் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் டாக்டர் ஜி. எஸ். தில்லான் அவர்கள் 9-1-1977 அன்று திறந்து வைத்து உரையாற்றினர்.

ஆண்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டப்பணிகளுக்கென தமிழ் நாட்டுக்கு ரூபாய் 4 கோடியே 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஆனல் கடந்த 1975-76-ஆம் ஆண்டில் இப் பணிகளுக்கென ரூபாய் 3 கோடியே 75 இலட்சத்து 76 ஆயிரம் தமிழ்நாடு அரசால் செலவிடப்பட்டது. இதிலிருந்து தமிழ்நாட்டின் சாலைவசதித் தேவைகளில் மத்திய அரசுக்கு இருக்கும் அக்கறை தெளிவாகும்.

''தேசிய நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திக்கென நிதியுதவி அளிப்பது நீங்கலாக தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களுக்கு இந்திய அரசாங்கம் நிதியுதவியும் அளித்து வருகிறது. தெரிந் தெடுக்கப்பட்ட சில மாநிலச் சாலைகள், மாநிலங்களுக்கு இடை யிலான சாலைகள், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சாலைகள் ஆகியவற்றுக்கென இந்த நிதி யுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மேற் கொள்ளப்பட்டுள்ள திட்டம் கிழக்கு கடற்கரை சாலை அபி விருத்தியாகும். இதில் பாலம் அமைக்கும் வேலையும் உள்ளடங் கும். இந்தப் பணிக்கென நான் காவது திட்டத்தில் ரூபாய் 2.61 கோடி கடனுதவிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் திட்டம் தற்போது முடிவடையும் கட்டத் தில் உள்ளது. மேலும் எண் ணற்ற பல வேலைகளும் மத்திய சாலை அமைப்பு நிதியிலிருந்து உதவித்தொகையைப் பெறுகின் றன. இப்படி நான்காவது திட்டக் காலத் துவக்கத்திலிருந்து இது வரை 28 பணிகளுக்கு ரூபாய் 4.05 கோடி தொகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### மாநில அரசுத் திட்டம்

''இந்த மாநிலத்தின் சாலை அபிவிருத்தியில் மத்திய அரசாங் கத்தின் முயற்சிகளையே இதுவரை விளக்கினேன். மாநிலத் திட்டத் தின்தின் கீழ் சாலை வசதிகள் மேம் பாட்டுக்கென மாநில அரசும் தீவிர கவனம் செலுத்தி வருவது

குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன். நான்காவது திட்ட முடிவில் சுமார் 62 சதவீத நீள சாலைகள் மேற்பூச்சு பூசப்பட்டன என்பது புள்ளிவிவரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. இது அகில இந்தியச் சராசரியான 34 சத விகிதத்தைக் காட்டிலும் அதிகம்.

''இந்த மாநிலத்தில் முழுச் சுற்றுச் சாலை அபிவிருத்திப் பணிகள் மும்முரமாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனைத் தொடர்ந்து இந்த மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குக்கும் சாலைகள் போய்ச் சேரும் நாள் வெகு தொலைவில் இல்லை!

### புதிய பாலம்

''கடந்த காலத்தில் போக்குவரத்துக்குப் பெரிதும் இடையூறாக இருந்து காவேரி, பவானி இரு ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டிருந்த—தற்போது செயல்பட்டு வரும்—பழையப் பாலத்திற்குப் பதில், இந்தப் பாலம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம் சிக்கனமாகக் குறைந்த செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக நகரங்களான சேலம், கோயம்புத்தூர் ஆகியவற்றுக்கு இடையில் எளிதான, இடையூறு இல்லாத போக்குவரத்துக்கு இந்தப் புதியப் பாலம் வழி வகுக்கும். நாட்டின் இதர பகுதிகளுடன் இந்த மாநிலத்தை இணைக்கும் ஒரு முக்கியச் சாலையாக இந்தச் சாலை இருப்பதால் கேரள மாநிலத்திற்கும் நேரடிச் சாலைப் போக்குவரத்துக்கும் இந்தப் புதியப் பாலம் வழி வகுக்கும்.

**(குமாரப்பாளையம் - பவானிக்கு, இடையில், காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தை 9-1-1977 அன்று திறந்து வைத்து ஆற்றிய உரையில் சில பகுதிகள்.)**



# இந்தியாவைச் சுற்றிப் பார்க்கப் புதியதோர் சலுகை!

சலுகைக் கட்டணத்துடன், ஒரே பயணச் சீட்டில் சுற்றுலாப் பயணிகள். இந்தியாவைச் சுற்றிப் பார்க்க ரயில்வே துறை வசதி செய்துள்ளது.

பிராந்திய இரயில்வேக்கள், நிர்ணயம் செய்யும் பயண வழிகளிலும், அல்லது பயணிகள் தாங்களே தீர்மானிக்கும் பயண வழிகளிலும் இந்த வட்டச் சுற்றுலா பயணச் சீட்டுகள் அளிக்கப்படும்.

முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளின், சாதாரண கட்டணத்தில் 15 சதவீதக் கழிவுச் சலுகை கிடைக்கும்.

பயண தூரம் 2,400 கிலோ மீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும். இது வட்டச் சுற்றுப் பயணமாக இருக்க வேண்டும். ஒரே வழியில் போய்த் திரும்பும் பயணமாக இருக்கக் கூடாது. சுற்றுப் பயணத்தின் மொத்த தூரம்-தொடக்க இடத்திற்கும், பயண வழியின் தொலைதூர நிலையத்திற்கும் இடையே உள்ள தூரத்தைப் போல மூன்று மடங்குக்கும் அதிகமாக இருக்க வேண்டும். பிரயாண தூரம்-2,400 லிருந்து 3,000 கிலோ மீட்டருக்குள் இருந்தால் 30 நாட்கள் வரையிலும், 3,000 முதல் 5,000 கிலோ மீட்டர் வரை இருந்தால் 60 நாட்கள் வரையிலும், 5,000 கிலோ மீட்டருக்கு மேற்பட்டிருந்தால் 90 நாட்கள் வரையிலும் இந்த வட்டச் சுற்றுலாப் பயணச் சீட்டுகள் செல்லுபடியாகும்.

இந்த குறிப்பிட்ட கால வரம்பிற்குள் பயணிகள் இடையில் எத்தனை முறை வேண்டுமானாலும் தங்கள் பயணத்தை நிறுத்திக் கொள்ளலாம்.

நாட்டின் வரலாறு, மத சம்பந்தமான இடங்கள், இயற்கையழகு கொஞ்சும் இடங்கள் ஆகியவற்றைக் காண விரும்பும் சுற்றுப் பயணிகளுக்குப் பணச் சலுகை அளிக்கவே இரயில்வே இந்த வட்டச் சுற்றுலாப் பயணச் சீட்டுகளை அறிமுகம் செய்துள்ளது. மேலும் இந்த பயணச் சீட்டுகளை வாங்குவதன் மூலம், சுற்றுப்பயணிகள், ஒவ்வொரு இடங்களிலும் பயணச் சீட்டு வாங்குதல், பயணச்சீட்டுகளுக்கென அதிக பணம் எடுத்துச் செல்லுதல் போன்ற தொல்லைகளிலிருந்து விடுபடலாம். நாட்டில் சுற்றுப்பயணிகளைக் கவரும் முக்கிய இடங்களை இணைக்கும் சிறந்த வட்டச் சுற்றுலாத் திட்டங்களைப் பிராந்திய இரயில்வேக்கள் வரைந்துள்ளன.

ஏழு பிராந்திய ரயில்வேக்கள் இதுபோன்ற 113 பயண திட்டங்களை வரைந்துள்ளன. மத்திய இரயில்வேக்கு 32 பயண திட்டங்களும், மேற்கு இரயில்வேக்கு 25, தென்மேற்கு ரயில்வேக்கு 18, தென்கிழக்கு, தெற்கு ரயில்வேக்கள் ஒவ்வொன்றுக்கும் 12, தெற்கு, கிழக்கு ரயில்வேக்கள் ஒவ்வொன்றுக்கும் ஏழு பயண திட்டங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. தென்கிழக்கு எல்லைபுறத்துக்கும், தெற்கு மத்திய ரயில்வேயுக்கும் வட்டச் சுற்றுலாப் பயண வழிகள் தயாரிக்கப்படவில்லை.

தாங்களே பயணத் திட்டத்தை வகுத்துக்கொள்ளும் சுற்றுந் பயணிகள் ஏதாவது ஒரு பிராப்திய ரயில்வேயின் ஒப்புதலை பெற வேண்டும்.



# இந்தியப் பொருளாதாரத்தில் தென்னை

—கே. வி. அஹமத் பவப்பா
இயக்குநர்,
மத்திய தோட்டப் பயிர் ஆராய்ச்சிக் கழகம்
காசர் கோடு.

இந்தியாவின் மொத்த விளை நிலத்தில் 0.8 சதவிகிதம்அல்லது 11.2 இலட்சம் ஹெக்டேரில் தான் தென்னை பயிரிடப்படுகிறது. எனினும் இந்தப் பயிரிலிருந்து கிடைக்கும் நேரடி வருமானம், நாட்டின் மொத்த உற்பத்தி அளவில் ஒரு சதவிகிதம் ஆகவும், விவசாய வருமானத்தில் 2 சதவிகிதம் ஆகவும் இருக்கிறது. ஏதாவது ஒரு வகையில் தென்னையால் பயனடைபவர்கள் எண்ணிக்கை ஒரு கோடியிருக்கும். புள்ளி விவரங்கள் ஒரு புறமிருக்க, தென்னை பயிரிடப்படும் பகுதி வாழ் மக்களின் அன்றாட வாழ்க்கையையும் இயல்புகளையும் தென்னை பலவாறுக உருவாக்குகிறது.

## பரப்பும் உற்பத்தியும்

கேரளம், தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களிலும், இந்தியாவில் தென்னை உற்பத்தி மிகுதி; நம் நாட்டில் தென்னை பயிராகும் பரப்பில் 93 சதவிகிதம், உற்பத்தியாகும் தேங்காயில் 95 சதவிகிதம் இந்த மாநிலங்களில் உள்ளன. கோவா, மஹாராஷ்டிரம், ஒரிசா, மேற்கு வங்காளம், அசாம் மாநிலங்களிலும் தென்னை பயிரிடப்படுகிறது. அந்தமான்—நிகோபார் தீவுகளிலும், இலட்சத் தீவுகளிலும், பயிர்களில் முதலிடம் வகிப்பது தென்னையே.

ஆண்டு தோறும் 600 கோடி தேங்காய் காய்க்கிறது. இதன் விலை மதிப்பு 600 கோடி ரூபாய் ஆகும். இதில் 60 சதவிகிதம் சமையலுக்குச் செலவாகிறது. எஞ்சியதை வைத்து 2 இலட்சம் டன் தேங்காய் எண்ணெய்யும் 1,05,000 டன் தேங்காய்ப் பிண்ணுக்கும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தேங்காய் எண்ணெய்யில் ஒரு பாதி, தொழிற்சாலைகளாலும் மற்றொரு பாதி சமையல் எண்ணெய்யாகவும் செலவிடப்படுகிறது. ஒரு கிலோ 10 ரூபாய் முதல் 12 ரூபாய் வரை விற்கிறது. எனவே மொத்தத்தில் தேங்காய் எண்ணெய்யின் மதிப்பு ரூபாய் 200 கோடி. நாடெங்கும் தேங்காய் எண்ணெய்மில்கள் உள்ளன. இவற்றின் தொகை 1661. இதில் 130 எக்ஸ்பெல்லர்கள். எஞ்சியவை ரோட்டரி மில்கள்.

## கயிறும் கயிற்றுப் பொருள்களும்

உலகின் தென்னை—தேங்காய் உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 20சதவிகிதம்தான். ஆனுல் கயிறு, கயிற்றுப் பொருள்கள் உற்பத்தியில் நம் நாட்டின் பங்கு 56 சதவிகிதம். மொத்தம் 1,61,000 டன் உற்பத்தியில் 54,000 டன் கயிறு; கயிற்றுப் பொருள்களை வெளிநாடுகளுக்கு விற்று 1975—76-ல் ரூபாய் 19.4 கோடி வெளிநாட்டுச் செலாவணி பெற்றேம்.

கயிறு பின்னுவது ஒரு குடிசைத் தொழில். இந்தியாவில் இத்தொழிலில் 90 சதவிகிதம் கேரளத்தில்தான் நடைபெறுகிறது. அங்கு 5 இலட்சம் தொழிலாளர்கள் கயிறு பின்னிப் பிழைக்கின்றுர்கள். ஊற வைத்த நாரைப் பயன்படுத்தி 23,791 இடங்களிலும், ஊற வைக்காத நாரை உபயோகித்து 94 இடங்களிலும் கயிறு பின்னும் தொழில் நடைபெறுகிறது. கயிற்று நூல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1,05,000. கதிர்கள் மூலம் பின்னுவதும் உண்டு. கையால் பின்னுவதும் உண்டு.

நாட்டின் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கில் தேங்காய் மட்டையை உபயோகித்துத்தான் இவ்வளவு நன்மைகளும் ஏற்பட்டுள்ளன. இந்தத் தொழிலில் சிறப்பிடம் வகிக்கும் கேரளத்தில் கூட தேங்காய் மட்டையில் 50

# இந்தியப் பொருள்களின் ஏற்றுமதியில் புதிய சாதனை




76/724

சதவிகிதமே உபயோகப்படுத் தப்படுகிறது. நமக்குக் கிடைக் கும் மூலப்பொருளை இன்னும் கூடுதலாகப் பயன்படுத்தி, ஏற்று மதி வருமானத்தைப் பெருக்கு வது நம் கடமை.

**பிற பொருள்கள்**

தேங்காய் எண்ணெய்யும், தென்னை நாரும் வியாபார அடிப் படையில் முக்கியமானவைதான். ஆயினும் தென்னையில் பிற பகுதி களும், மங்களுக்குப் பல வகை களில் பயன்படுகின்றன.

தென்னை ஓலை, வீடு வேய்வதற் கும் சமையல் செய்ய விறகுக்குப் பதிலாகவும் உதவுகிறது. ஒரு தென்னையிலிருந்து ஓராண்டில் 8 முதல் 12 ஓலைகள் உண்டாகின் றன. 100 ஓலையின் விலை ரூபாய் 25 முதல் 30 வரை விற்கிறது.

தென்னையின் அடி மரம் வீடு கட்ட உதவுகிறது. இந்த அடி மரம் 40 அல்லது 50 ரூபாய்க்கு விற்கிறது. தென்னை சிப்போர்டு எனப்படும் சுராப் பலகைகள் செய்யவும், குடிசைத் தொழில் களில் பயன்படும் பொருள்கள் பல வற்றைச் செய்யவும் அடி மரம் உதவுகிறது.




## அஞ்சல் தலையிலே தென்னை !

இந்தியத் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரவிழாவை யொட்டி தபால்-தந்தித் துறை 1976, டிசம்பர் 27-ஆம் தேதி யன்று சிறப்பு அஞ்சல் தலை ஒன்றை வெளியிட்டது. அதன் படம் வெளியிடப்பட்டுள்ளது.

பல வண்ணங்களில் அச்சிடப்பட் டுள்ள இந்தத் தபால் தலையில் ஓர் இளம் தென்னங்கன்றின் படம் இடம்பெறுகிறது. இதன் மதிப்பு 25 காசு.

இளநீர், சுவையானது. கிரா மங்களில் மட்டுமின்றி நகரங் களில் வாழ்பவர்களும் இளநீரைக் குடிக்கிறார்கள். பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய நகரங் களில் இளநீர் வியாபாரம் அதிக மாக நடைபெறுகிறது. சிறு வியாபாரிகள் வாழ வழி வகுக் கிறது, தென்னை. தண்ணீரின் சுவைக்காக இளநீரைக் குடித்து தாகம் தணித்துக் கொள்பவர்கள் உள்ளனர். அதில் உள்ள சுவை யும் சத்தும் நிறைந்த இளம் தேங்காய்க் கீற்றைக் கடித்துத் தின்பதற்காக இளநீர் வாங்குப வர்களும் உள்ளனர். சர்க்கரை யும் உப்பும் அமினோ ஆசிடும் அடங்கிய இந்த பானம் கிருமி களைப் போக்க வல்லது. ஊசி மருந்துகளில் சேர்த்துக் கொள் ளப்படுகிறது. வயிற்றுக் கோளா றுகளுக்கு மருந்தும் ஆகும்.

**வீணாகும் பொருள்களுக்குப் புதிய உபயோகங்கள்**

தென்னை உற்பத்தியாகும் பெண்பால் பூக்கள் (மொக்குகள்) பெரும்பாலும் வீணாகின்றன. இந்த நஷ்டம் ஆண்டுதோறும் 70,000 டன் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. தோல் பதனிட உதவும் ஒரு படிகப் பொருள் இதில் இருக்கிறது. தவிரவும், இந்த மொக்குகளைத் தண்ணீரின் அழுத்தத்தாலும் தேவையான சூடேற்றியும் பலகைச் சட்டங்க ளாக மாற்ற இயலும்.

தென்னை உமியில் பாதிப் பகுதி வரை தென்னை நெட்டியாகும். சுவர்களாகப் பயன்படுத்தப்படும் பலகைகள், கூரைப் பலகைகள், தளத்தில் பாவப்படும் கற்கள் ஆகியவற்றைச்செய்வதற்கு இந்த நெட்டிகளும் பயன்படுத்தப்படு கின்றன.

தேங்காயின் மேல் ஓடு முழுவ தும் எரி பொருளாக உபயோகிக் கப்படுகிறது. இன்றைய விலை யில், நம் நாட்டில் கிடைக்கும் மேல் ஓடுகளின் விலை ஆண்டொன் றுக்கு 12 கோடி ரூபாய் ஆகும். இந்த மேல் ஓடுகளிலிருந்து







# கற்பக விருட்சம்




அடுப்புக் கரி 1,200 டன் மட்டும் தயாரிக்கிறோம். இதன் மதிப்பு 6 இலட்சம் ரூபாய் ஆகும். மேல் ஓடுகளை 100 முதல் 300 வரை மெஷ் அளவுக்குப் பொடியாக்கினால் பிளாஸ்டிக் பொருள்கள் செய்வதற்கு உதவும் சிறந்த தொரு மூலப்பொருளாக உதவும்.

கொப்பரையாகவும், எண்ணெய்யாகவும் மட்டும் தேங்காய் பயன்படுத்தப்படுகிறது. சத்துள்ள உணவுப் பொருளாகவும், சாக்லட் செய்வதற்குப் பயன்படக் கூடிய ஒரு பொருளாகவும் தேங்காயைப் பயன்படுத்தலாம். தேங்காய் எண்ணெய்யிலிருந்து உண்டாக்கக் கூடிய பொருள்களும் உள்ளன. இவ்வகைகளிலெல்லாம் நம் நாட்டில் இது வரை ஒருவரும் கவனம் செலுத்தவில்லை.

## சிறு விவசாயிகளுக்குக் கற்பக விருட்சம்

தென்னை பயிரிடுபவர்கள் சிறு விவசாயிகளே ஆவர். இந்தியாவில் தென்னை பயிராகும் பரப்பில் 67 சதவிகிதம் கேரளத்தில் இருக்கிறது. அந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டால் 23 இலட்சம் பேர் தென்னை பயிரிடும் விவசாயிகள். இதில் 90 சதவிகிதத்தினர் ஒரு ஹெக்டேரில் தான் பயிரிடுகிறார்கள். அதில் 37 சதவிகிதம் பேர் 0.2 ஹெக்டேரில் மட்டும் தான் பயிர் செய்கிறார்கள். இந்த ஈவுக் கணக்கு தமிழ்நாட்டில் 95 சதவிகிதம், 69 சதவிகிதம் ஆகவும், கர்நாடகத்தில் 95 சதவிகிதம், 52 சதவிகிதம் ஆகவும், ஆந்திரப் பிரதேசத்தில் 98 சதவிகிதம், 56 சதவிகிதம் ஆகவும் இருக்கிறது. எனவே, தென்னை பயிரிடுபவர்கள் சிறு விவசாயிகள் என்பதும் தென்னை செழித்தால்தான் அவர்கள் நல்வாழ்வு வாழ இயலும் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.

## இப்போதைய உற்பத்தியும் எதிர்காலமும்

இந்தியாவில் ஒரு தென்னை மரத்தில், ஓர் ஆண்டில் சராசரி 35 காய்தான் காய்க்கின்றன. இது மிகவும் குறைவான உற்பத்தி. பயிரிடப்படும் தென்னைகளின் தரக் குறைவு இதற்கு ஒரு காரணம். தக்கவாறு உரம் இடாததாலும், நீர்ப்பாசன வசதி செய்யாததாலும், பூச்சித்தடுப்பு மருந்துகளை உபயோகிக்காததும் இந்தக் குறைவான விளைவுக்குக் காரணமாக உள்ளன. நாட்டுத் தென்னையைப் போல இரண்டு மடங்கு காய்க்கக் கூடிய புது வகைத் தென்னங் கன்றுகள் இப்போது ஆராய்ச்சியில் பயனாக உருவாகியிருக்கின்றன.

பாசன வசதி அளித்தும் தேவையான உரமும் பூச்சி மருந்தும் உபயோகித்தும், உற்பத்தி அளவைக் கூடுதலாக்கலாம். ஊடு பயிர்களைப் பயிரிட்டும், பாசன வசதி செய்து கொடுத்தும் ஒரு மரத்துக்கு ஆண்டொன்றுக்கு 74 காய்கள் என்பது பல இடங்களில் 190 ஆக ஆக்கப்பட்டிருக்கிறது. இப்போது தென்னை பயிரிடப்பட்டிருக்கும் பரப்பில் 10 சதவிகிதமே பாசன வசதி பெற்று இருக்கிறது. மேலும் 15 சதவிகிதம் பரப்பில் பாசன வசதி செய்ய இயலும். இதனால் மட்டும் ஆண்டுதோறும் கூடுதலாக ஒரு கோடி 40 இலட்சம் தேங்காய் காய்க்கும், ஊடு பயிர்களாலும், உரம் போடுவதாலும் பூச்சிகளைத் தடுப்பதாலும் மேலும் 55 இலட்சம் தேங்காய் காய்க்கும்.

தென்னை விவசாயிகளின் பண்ணை, சராசரியாக 0.22 ஹெக்டேர் பரப்பு உள்ளதாகவே இருக்கிறது எனவே சிறந்த முறைகளைக் கையாண்டும் உப பொருள்களை உபயோகித்தும்தான் இந்தப் பொருளாதாரத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். காசர்கோடிலுள்ள மத்திய தோட்டப் பயிர் ஆராய்ச்சி நிலையங்களின் வைர விழா 1976 டிசம்பர் 27 முதல் ஜனவரி 8 வரை நடைபெற்றது. இந்த விழாவின் பயனாக, தென்னையின் பொருளாதார நிலை பற்றிக் கவனம் செலுத்தப்பட்டு, தென்னைத் தொழிலின் முன்னேற்றத்துக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.



# படமும் செய்தியும்




குறைந்த செலவில் வீடுகள் கட்டுவது பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கை, சென்னையில் 19—1—1977 அன்று தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், மத்திய பணிகள் மற்றும் வீட்டு வசதி அமைச்சர் திரு ஹித்தேந்திர தேசாய் அவர்கள் துவக்கி வைத்தார்.

சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் விபத்துக்களைக் கவனிக்கும் பகுதியை உள்துறை இராஜாங்க அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்கள் 22—1—1977 அன்று திறந்து வைத்துப் பார்வையிட்டார்.








சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையின் விபத்துக்களைக் கவனிக்கும் பகுதியைச் சார்ந்த நடமாடும் ஊர்தியின் பணியினைத் தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 22—1—1977 அன்று துவக்கி வைத்தார்.

# சென்னையில் குடியரசு நாள் விழா







நமது இந்தியாவின் 28-வது குடியரசு நாள் விழாவை முன்னிட்டு, சென்னை காமராஜ் சாலையில் உள்ள காந்தி சிலை அருகே 26—1—1977 அன்று காலை, தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள், நமது தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அதன்பின் முப்படைத்தளபதிகள் தலைமையில் முப்படை வீரர்கள் அணிவகுப்பு மரியாதையையும், குதிரைப்படை வீரர்கள், என். சி. சி. மாணவ-மாணவிகள், சாரணர் ஆகியோரின் அணிவகுப்பு மரியாதையையும் ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.











அணிவகுப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை விளக்கும் அலங்கார வண்டிகள் வந்தன! அவைகளைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்!













பள்ளிக் கல்வித்துறையின் அலங்கார வண்டி முதலாவது சிறந்த அலங்கார வண்டியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.




செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார வண்டி இரண்டாவது சிறந்த அலங்கார வண்டியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டது.




வேளாண்மைத்துறையின் அலங்கார வண்டி மூன்ருவது
சிறந்த அலங்கார வண்டியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.






குடியரசு நாள் விழாவையொட்டி, சென்னையில் உள்ள நேரு விளையாட்டு அரங்கில், 26-1-1977 அன்று, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் குழந்தைகள் பேரணியைத் துவக்கி வைத்தார்.





# உல்லாச உந்துகளில் செல்லலாம் சுற்றுலா

தமிழ்நாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும், புனிதத் தலங்களையும், வரலாற்றுப் புகழ் மிக்க நினைவுச் சின்னங்களையும் கண்டு களித்திடுவதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 3 ஒருங்கிணைந்த சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இச்சுற்றுலாக்களில் தமிழ்நாட்டின் கவர்ச்சி மிகு சுற்றுலாத் தலங்களும், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் உள்ள சில கவர்ச்சி மிகு இடங்களும் இடம் பெற்றுள்ளன. இக் கவர்ச்சி மிகு சுற்றுலாத் தலங்களை நவீன வசதிகள் கொண்ட உல்லாசப் பேருந்துகளின் மூலம் காணலாம். இச் சுற்றுலாவில் கலந்து கொள்வோர் இரவு நேரங்களில் தங்குவதற்குத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் சுற்றுலா மாளிகைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா மாளிகைகளில் விரிப்புகள், துவாலைகள், சோப்புகள் முதலியன கொண்ட தற்காலிக தங்கும் வசதிகள் சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைக்கும். இதற்கெனத் தனிக் கட்டணம் செலுத்தத் தேவை இல்லை. தனியான தங்கும் வசதி வேண்டும் என்று கேட்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் சுற்றுலா மாளிகைகளில் 50 சதச் சலுகை வாடகையில் தனி அறைகள் (குளிர் சாதன வசதியற்ற அறைகள் மட்டுமே) வழங்கப்படும். சாப்பாடு மற்றும் இதரச் செலவுகளைச் சுற்றுலா செல்லும் பயணிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**சுற்றுலா எண்: 1**

நாள்தோறும் காலை 7.00 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டு, காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களைக்கண்டுகளித்துச் சென்னைக்குத் திரும்பும் வகையில் இச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச் சுற்றுலாவிற்கான கட்டணம் ரூபாய் 22.00. இச் சுற்றுலாவில் காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரேசுவரர் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில் ஆகியவைகளைப் பார்வையிடுதல், காஞ்சிபுரம் கடைகளில் ஏதேனும் பொருள் வாங்குதல், திருக்கழுக்குன்றத்தில் கழுகுகளைக் காணுதல், மாமல்லபுரத்தில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க நினைவுச் சின்னங்களைக் காணுதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**சுற்றுலா எண்: 2**

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக் கிழமையன்று துவங்கி அடுத்த வெள்ளிக் கிழமையன்று முடிகிறது. ஏழு நாள் கொண்ட இச் சுற்றுலாவிற்கான கட்டணம் இருக்கைக்கு ரூபாய் 250 ஆகும். சென்னையிலிருந்து புறப்பட்டு திருவண்ணாமலை, ஏர்க்காடு, மேட்டூர் அணை, உதகை, முதுமலை வனவிலங்குச் சரணாலயம், பிருந்தாவனம், மைசூர், ஸ்ரீ ரங்கப்பட்டணம், பெங்களூர், ஒகேனக்கல், திருத்தணி, காஞ்சிபுரம் ஆகிய ஊர்களைக் கண்டு இன்புற்றுத் திரும்ப இச் சுற்றுலா உதவுகிறது. இச் சுற்றுலாவில் கலந்து கொள்வோர் ஏர்க்காடு, உதகை (இரு இரவுகள்), மைசூர், ஒகேனக்கல் (இரு இரவுகள்) ஆகிய இடங்களில் இரவு தங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதுமலையில் காட்டு யானைக் கூட்டங்களைக் காணவும், ஒகேனக்கல் அருவியில் குளித்து மகிழவும், படகு ஓட்டி மகிழவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.




### 'குறித்த காலத்தில் பணம் பெறும் பாலிஸி'

மற்ற திட்டங்களை விட விரைவாகவும், அதிக மாகவும், பாலிஸி முதிர்ச்சி அடைவதற்கு முன்பே இடை இடையே குறித்த காலங்களில் பணத்தைத் திரும்பப் பெறலாம்.

தவிர, முழு ஆயுள் பாது காப்பும் கிடைக்கிறது.

### 'பணம் மற்றும் பாதுகாப்பு (கேஷ் அண்ட் கவர்) பாலிஸி'

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தவணைத் தொகைகள் நிச்சயமாகக் கிடைப்பதுடன், முழுக் காப்புத் தொகையின் மீதும் போனஸ் கிடைக்கிறது. இத்துடன் உங்கள் ஆயுள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கிறது.

### வளரும் பாதுகாப்புப் பாலிஸி'

புதுப் பிரேரணையோ மருத்துவப் பரிசோதனையோ இன்றி, உங்கள் பாலிஸியின் மதிப்பு குறிப்பிட்ட காலங் களில் கூடிக் கொண்டே போகிறது.

**மாறிவரும் காலங்களுக்கும்...
மாறிவரும் தேவைகளுக்கும்.**

**லைப் இன்ஷ்யூரன்ஸ்
கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**

JaCunha/LIC/38 TAM



ஒகேனக்கல் அருகே பரிசலில் ஆற்றைக் கடப்பது இனிய பொழுது போக்காகும்!

**சுற்றுலா எண்: 3**

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமையன்று துவங்கி, அடுத்த சனிக்கிழமையன்று திரும்பும் வகையில் இச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. எட்டு நாள் கொண்ட இச் சுற்றுலாவிற்கான கட்டணம் இருக்கைக்கு ரூபாய் 250 ஆகும். சென்னையிலிருந்து புறப்பட்டு, பாண்டிச்சேரி, சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சி, இராமேஸ்வரம், மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், குற்றாலம், திருவில்லிபுத்தூர், கொடைக்கானல், பழனி, திருச்சி ஆகிய இடங்களைப் பார்த்து மகிழ்ந்து திரும்பும் வகையில் இச் சுற்றுலா அமைக்கப்பட்டுள்ளது. இச் சுற்றுலாவில் கலந்து கொள்வோர் திருச்சி (2 இரவுகள்) மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி (2 இரவுகள்), கொடைக்கானல் ஆகிய இடங்களில் இரவு தங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திருச்செந்தூர், இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கடலில் குளித்து மகிழவும், கொடைக்கானலில் படகு ஓட்டவும், 'கால்ஃப்' விளையாடவும், வேடந்தாங்கலில் பறவைகளைக் கண்டு மகிழவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**பிற சுற்றுலாக்கள்**

இம் மூன்று ஒருங்கிணைந்த சுற்றுலாக்களைத் தவிர, நாள்தோறும் சென்னை நகரைச் சுற்றிப்பார்க்க ரூபாய் 10 கட்டணத்திலும், மாமல்லபுரத்தைமட்டும் பார்த்து வர ரூபாய் 15 கட்டணத்திலும், மாமல்லபுரம், சென்னை ஆகிய இரண்டையும் ஒரே நாளில் பார்த்து மகிழ ரூபாய் 22 கட்டணத்திலும் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சுற்றுலாக்களில் கலந்து கொள்ள விரும்புவோர், ''தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 34, அண்ணா சாலை, சென்னை-600 002'' என்ற முகவரியிலும், ''விரைவுப் பேருந்து நிலையம், உயர்நீதி மன்ற வளைவு, சென்னை-600001'' என்ற முகவரியிலும் கட்டணம் செலுத்தித் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

(குறிப்பு : சுற்றுலாக் கட்டணங்கள் மாறுதலுக்கு உட்பட்டவையாகும்).

## தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கும் புதிய ரயில்!

இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கும் ஒரு வழியாக, 1977 பிப்ரவரி 16-ந் தேதி முதல், கங்கை - காவிரி துரித ரயில் விடப்படும் என்று மத்திய ரெயில்வே அமைச்சர் திரு கமலபதி திரிபாதி அவர்கள் 13-1-'77 அன்று திருச்சியில் அறிவித்துள்ளார்.

''வாரணசி (காசி) யில் இருந்து ராமேசுவரத்துக்கு துரித ரயில் விட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது.

அந்தத் திட்டப்படி அடுத்த மாதம் (பிப்ரவரி) 16-ந் தேதி சிவராத்திரி முதல், வாரணசியில் இருந்து ராமேசுவரத்துக்கு துரித ரயில் விடப்படும்.

இந்த ரயிலுக்கு 'கங்கை-காவிரி எக்ஸ்பிரஸ்' என்று பெயரிடப்பட்டு உள்ளது.

வாரணசியில் இருந்து சென்னை சென்டிரல் வரை அகல ரயில் பாதையில் (பிராட்கேஜ்) வந்து, அங்கு இருந்து தனிப் பேருந்துகளில் எழும்பூர் ரயில் நிலையத்துக் குச் சென்று ரயில் ஏற வேண்டும். இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளன.

மொத்தம் 36 மணி நேரத்தில் வாரணசியில் இருந்து ராமேசுவரத்தை அடைந்து விடலாம்!

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்ரும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆரும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெருதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.

# வீதி விளக்கிலே படித்து நீதிபதியாக உயர்ந்தவர்!



**வீதி விளக்கிலே படித்து நீதிபதியாக உயர்ந்து மேதினி போற்ற வாழ்ந்து மேதை எனவே திகழ்ந்த முத்துசுவாமி ஐயர் அவர்களின் நினைவு நாளையொட்டி (ஜனவரி, 25) அவருடைய வரலாறு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.**

**தே**ன்னாட்டில் முத்துசுவாமி ஐயரை அறியாதவர் ஒருவருமில்லை. நல்வழியில் செல்லுமாறு குழந்தைகளுக்குப் புத்திமதி கூறும்பொழுது தாய், தந்தையர்கள் இன்னும் முத்துசுவாமி ஐயரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடுகிறார்கள். அறிவுக் கூர்மை, பெருந்தன்மை, எளிமை, அறநெறி முதலியவற்றில் அவருக்கு ஈடானவர் தென்னாட்டில் மிகச் சிலரே. முத்துசுவாமி ஐயர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். தம்முடைய உழைப்பின் வாயிலாக அவர் வாழ்க்கையில் முன்னேறி, கடைசியில் மிக உன்னதப் பதவிக்கு வந்தார். எல்லா உயர் பதவிகளுக்கும் ஆங்கிலேயர்களையே நியமித்து வந்த அந்தக் காலத்தில் முத்துசுவாமி ஐயருக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றும் கௌரவம்கூடக் கிடைத்தது.

சென்னை, திருவள்ளூருக்கு அருகில் உள்ள உச்சவாடி என்னும் கிராமத்தில் 1832-ஆம் ஆண்டு முத்துசுவாமி ஐயர் பிறந்தார். அவருடைய தந்தை வேங்கடராம சாஸ்திரி, மிகவும் ஏழ்மை நிலையில் இருந்ததுமின்றி கண் பார்வையற்றவராகவும் இருந்தார். முத்துசுவாமி ஐயரின் தாய் மிகுந்த புத்திசாலித்தனத்துடன, கஷடப்பட்டு உழைத்து அவரை வளர்த்தார். ஐயருக்குச் சிறிது எழுதப் படிக்கத் தெரிந்ததும் உள்ளூரிலிருந்த ஒரு குமாஸ்தாவிடம் ஒரு ரூபாய் சம்பளத்தில் வேலைக்கு அமர்ந்தார். அக்காலத்தில் ஒரு ரூபாய்க்குக்கூட மதிப்பு அதிகம். முத்துசுவாமி ஐயரின் வீட்டுக்கு அப்போது இந்த ஒரு ரூபாய் சம்பாத்தியம் கூட அவசியமானதாக இருந்தது. பன்னிரண்டாவது வயதுவரை அவர் இவ்வேலையைச் செய்து வந்தார்.

அச்சமயத்தில், தாசில்தார் அலுவலகத்தில் கணக்கு எழுதுவதில் சிக்கல் ஏற்பட்டது. அந்த வேலைக்கு ஒரு குமாஸ்தா தேவை என்று தெரிய வந்தது. வேறு ஆள் கிடைக்காமையால் முத்துசுவாமி ஐயர் அவ்வேலைக்கு அனுப்பப்பட்டார். அவர் மிகுந்த கவனத்துடன் வேலையைத் தொடங்கி நன்றாக உழைத்தார், அவருடைய உழைப்பைக் கண்டு தாசில்தார் மிக்க மகிழ்ச்சியடைந்தார். முத்துசுவாமி ஐயர் முன்னேறுவதற்கு இந்தத் தாசில்தார் பெரிதும் உதவினார். தொடர்ந்து உயர்தரக் கல்வி பயில்வதற்காக முத்துசுவாமி ஐயரை அவர் சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

சென்னை சென்ற ஐயர் தம்முடைய புத்திக் கூர்மையினாலும் உழைப்பினாலும் எல்லா ஆசிரியர்களையும் வியப்பிலாழ்த்தினார். 'கௌன்சில் ஆப் எஜுகேஷன்' என்ற ஸ்தாபனம், உயர்தர ஆங்கிலக் கட்டுரைக்கு வழங்கி வந்த 50 ரூபாய்ப் பரிசை அவர் பெற்றார். முத்துசுவாமி ஐயருக்கு ஆங்கில எழுத்தாளர் 'ஆலிவர் கோல்டு ஸ்மித்'தின் கவிதைகள் பிடித்தமானவை. தமது மரணத் தறுவாயிலும் அந்த எழுத்தாளருடைய கவிதையைத் தொண்ணூற்றோராவது முறையாக அவர் படித்தார் என்று கூறுகிறார்கள். உயர்நிலைப்பள்ளிப் பரீட்சையில் தேறியபின் இருபத்து மூன்றாவது வயதில் உயர்நிலைப் பள்ளியில் அவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. சிறிது காலத்திற்குப் பின் பள்ளிக்கூடங்களின் இன்ஸ்பெக்டராக அவர் நியமிக்கப்பட்டார். இவ்வேலையில் சிறிது காலம் இருப்பதற்குள்ளாகவே 'கௌன்சில் ஆஃப் எஜுகேஷன்' அங்கத்தினரான ஹோலாவே என்பவர் அவரை ஜில்லா ஜூனியர் அதிகாரியாக நியமித்தார். அந்த வேலையில் சேர்ந்த சிறிது காலத்திற்குள்ளாகவே டெப்டி கலெக்டராக, மாஜிஸ்ட்ரேட்டின் அதிகாரத்துடன் அவர் நியமிக்கப்பட்டார். இச்சமயத்தில் தஞ்சாவூரில் நடந்து கொண்டிருந்த ஒரு வழக்கில் அவருடைய திறனைக் கவ

னித்த 'ஜான் ப்ரூஸ் நார்ட்டன்' என்பவர் மிகவும் வியப்படைந்தார். அவர், சென்னை திரும்பியதும், நீதி நெறியில் சேர்ந்த ஒரு மனிதனை நிர்வாக இலாகாவில் நியமித்ததால் தேசம் நஷ்டப்படுவதாக ஹோலோவேயிடம் தெரிவித்தார்.

அதே சமயத்தில் தென் கர்நாடகத்திலிருந்து ஒரு உப நீதிபதியின் பதவிக்கு மூன்று பேர்களை சிபாரிசு செய்து அனுப்பும்படி ஹோலோவேக்கு கடிதம் வந்தது. இதற்குப் பதில் எழுதும்பொழுது மூன்று தனி மனிதர்களின் பெயர்களை எழுதுவதற்குப் பதிலாக முத்துசுவாமி ஐயருடைய பெயரையே மூன்று முறையும் எழுதி அனுப்பினர் ஹோலோவே. இதன் பலனாக முத்துசுவாமி ஐயர் உப நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவருடைய அறநெறியும் நீதி வழங்குவதில் அவர் காட்டிய நேர்மையும், அறிவும் உழைப்பும் சேர்ந்து இப்புதிய பதவியில் அவருக்கு வெற்றி அளித்தன.

சில காலத்துக்குப் பிறகு முத்துசுவாமி ஐயர் சென்னையில் போலீஸ் மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்பட்டார். இந்தப் பதவியிலிருந்து கொண்டே அவர் வக்கீல் பரீட்சைக்குப் படித்து முதல் வகுப்பில் தேறினார். அச்சமயத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி அவருடைய பாரபட்சமற்ற தன்மையையும், பயமின்மையையும் வெளிப்படுத்துகிறது. ஒரு சமயம் இந்தியர் ஒருவர் உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்த ஒரு ஆங்கிலேயருக்கு நீதி மன்றத்தில் ஆஜராகும்படி 'சம்மன் அனுப்பியிருந்தார். அந்த நீதிபதி நீதி மன்றத்திற்கு வரவில்லை; சட்டத்தை அவமதித்த குற்றத்திற்காக அந்த ஆங்கிலேய நீதிபதிக்கு முத்துசுவாமி ஐயர் மூன்று ரூபாய் அபராதம் விதித்துவிட்டார்.



முத்துசுவாமி ஐயருடைய ஞாபகசக்தி மிகவும் அபூர்வமானது. அவர் கடுமையான உழைப்பாளி. வெகு நுணுக்கமான விஷயங்களைக் கூடச் சுலபமாகத் தெரிந்து கொண்டு விடுவார். வாழ்க்கை, ஆட்சி நிர்வாகம் என்னும் இரண்டையும் நன்றாக அறிந்திருந்தார். சட்டத் துறையில் அவர் உயரிய ஆற்றல் பெற்றிருந்தார். தமது எண்ணங்களை எளிமையாக விளக்குவதில் அவருக்கு இணை இல்லை. இத்தகைய அருங்குணங்கள் அமைந்திருந்ததால் அவர் ஒரு மேதையாக விளங்கினார். அவரிடம் அகம்பாவமே கிடையாது. அவர் மனிதத் தன்மை நிறைந்தவர். தம்முடைய நண்பர்களிடத்தில் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார். அவருடைய இளம்பிராயத்து நண்பர் ஒருவர்ஒரு கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்று அவர்மீது வழக்கு ஐயர் முன்னால் விசாரணைக்கு வந்தது. நண்பனுக்கு 'வாரண்ட்' அனுப்பும்பொழுது கூடவே கடனை அடைக்கப் பணமும் அனுப்பி வைத்தார், முத்துசுவாமி ஐயர்.

ஐயருடைய எளிய வாழ்க்கையை எடுத்துக் காட்டும் கதை ஒன்று இன்னும் தென்னாட்டில் நிலவி வருகிறது. ஒருமுறை நவாப் ஸையத் அஹமதைப் பார்ப்பதற்காக அவர் சென்றாராம். முத்துசுவாமி ஐயர் மிகவும் எளிமையான உடைகளை அணிந்திருப்பார். அச்சமயத்திலும் எளிய உடையே அவர் அணிந்து சென்றார். நவாப்பின் காவற்காரன், குறிப்பிட்ட சமயத்திலேதான் நவாப்பைப் பார்க்க முடியும் என்று அவரிடம் கூறிவிட்டான். குறிப்பிட்ட நேரம் வரும் வரை முத்துசுவாமி ஐயர் வெளியிலேயே காத்திருந்தார். நவாப் வெளியில் வந்தவுடன் சாதாரண ஜனங்களுடன் சேர்ந்து நின்ற ஐயரைப் பார்த்து மிகவும் வருந்தினார். உயர்ந்த பதவியை அடைந்துங்கூட 'எளியவாழ்க்கை, உயரிய சிந்தனை' என்ற இலக்கணத்துக்கு விளக்கமாக ஐயர் விளங்கினார்.

வாழ்க்கையை அனுஷ்டானபூர்வமாய் நன்றாக அறிந்திருந்தார் முத்துசுவாமி ஐயர். அவர் புத்தகப் புழுவல்ல. சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் பொறுத்துச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியம். ஏனென்றால், உலகத்தில் நன்னடத்தையுள்ள மனிதன்கூட, சூழ்நிலையின் விளைவாகக் கெட்ட காரியம் செய்யும்படி நேரிடுகிறது என்று அவர் கூறுவதுண்டு. இதனால் தானோ என்னவோ முத்துசுவாமி ஐயர் தமது நீதிபதி பதவிக்காலத்தில் எவருக்கும் மரண தண்டனை விதிக்கவில்லை. இவ்விதம், அவரிடம் அறிவும் கருணையும் நிறைந்திருந்ததால் மக்கள் அவரிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தனர்.

முத்துசுவாமி ஐயர் பாரதப் பண்பில் ஊறியிருந்தார். சமூக முன்னேற்றத்திற்காக அவர் அநேக காரியங்கள் செய்தார். பெண்களுக்கு மருத்துவமனை ஒன்று நிறுவுவதற்கு அவர் ஏற்பாடு செய்தார். சமூகம் முன்னேறுவதற்கும், நாடு சுதந்திரம் பெறுவதற்கும், இந்தியர்களுக்கு கல்வி மிகவும் அவசியம் என்று



அவர் எண்ணினார். ஆங்கிலப் படிப்பிலிருந்தும், மேலை நாட்டு நாகரிகத்திலிருந்தும் நல்ல அம்சங்களை நம் நாட்டில் பின்பற்றினால் பாரதம் முன்னேற்றப் பாதையில் செல்ல முடியும் என்று அவர் அடிக்கடி கூறுவார். ஆனால் பாரதவாசிகள் தங்கள் பழைய பண்புகளை மறந்து மேலைநாட்டு நாகரிகத்தில் மூழ்கிவிட வேண்டும் என்பது அவர் கருத்தல்ல. முழு அளவில் மேலைநாட்டு நாகரிகத்தைத் தழுவினால் இந்தியா முன்னேற்றமடைய முடியாது என்பதே அவர் எண்ணம். பாரதப் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டியது தமது கடமை என்று ஐயர் நினைத்தார். பாரதப் பண்பாடு பழமையானது. ஒரு காலத்தில் அது உலக முழுவதன் கவனத்தையும் கவர்ந்திருந்தது. அதை இந்தியா தனது வழிகாட்டியாகக் கொண்டு மேலைநாட்டு நாகரிகத்தின் நல்ல அம்சங்களையும் சேர்த்துக் கொண்டால் பிரமாதமாக முன்னேற முடியும் என்று அவர் கருதினார்.

முத்துசுவாமி ஐயர் தம்முடைய சுற்றத்தார்களிடம் மிகுந்த அன்பு வைத்திருந்தார். அவர்களைப் பிரிந்து வெளிநாடு செல்ல அவர் விரும்பவில்லை; இதன் காரணமாகவே, ஐ. ஸி. எஸ். படிக்க மேல்நாடு செல்லும்படி அவரிடம் கூறியபொழுது அவர் மறுத்துவிட்டார்.

அவர் நிரம்பப் படித்தவர். நீதிபதியான பிறகும்கூட சட்டப் படிப்புடன் நின்றுவிடமல் அரசியலுடனும் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். பொருளாதாரம் மற்றும் அரசியல் நோக்கிலிருந்து பார்த்தால் இன்னும் சில காலம் ஆங்கில அரசாட்சி பாரத தேசத்தில் இருப்பது நலமென அவர் கருதினார். ஆங்கிலேயர்களை மகிழ்வுறச் செய்வதற்காக அவர் இவ்வாறு கூறவில்லை. பிரத்தியட்ச நிலைமை காரணமாகவே அவர் இவ்வாறு கருதினார். அச்சமயம் இந்தியர்கள் படித்தவர்களாக இருக்கவில்லை; அவர்கள் முதலில் கல்வியறிவு பெற வேண்டும் என்று அவர் கருதினார். முத்துசுவாமி ஐயர் அரசாங்கத்தில் வேலை பார்த்து வந்ததனால் நேரடியாக அரசியலில் அவர் ஈடுபட முடியவில்லை. அதனால் நடைமுறை அரசியலில் அவர் அதிகமாகப் பங்கு பெறவில்லை.

இந்தியாவில் ஆங்கில அரசாட்சியின் ஆரம்பக்கட்டத்தில் ஆங்கிலேயர்களுக்கே உயர்ந்த பதவிகள் வழங்கப்பட்டு வந்தன. நாளாவட்டத்தில் ஆங்கிலேயர்களின் இவ்வழக்கம் மாறுதலடைந்தது. சில இந்தியர்களுக்கும் உயர்ந்த பதவிகள் கிடைக்கத் தொடங்கின. ரமேச சந்திர மித்ராவைக் கல்கத்தா உயர் நீதி மன்றத்தின் உயர் நீதிபதியாக நியமித்த பொழுதுதான் இந்தப் பதவியின் வாயிற்கதவு எல்லா இந்தியர்களுக்கும் திறந்து விடப்பட்டது. சென்னை உயர் நீதி மன்றத்தின் உயர் நீதிபதியாக முத்துசுவாமி ஐயர் நியமிக்கப்பட்டார். இந்தப்பதவியை அலங்கரித்த பிறகு அவருக்கு ''ஸர்'' பட்டம் வழங்கப்பட்டது. அவருடைய நியாய மனப்பான்மையே இவ்வளவு பெரிய பதவியை அவர் அடையும்படிச் செய்தது.

உயர்நீதிபதியான சில ஆண்டுகளுக்குள்ளாகவே ஐயருடைய ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது. 1894-ஆம் ஆண்டு முடிவில் அவருடைய நிலை கவலைக்கிடமுள்ளதாக ஆயிற்று. அதன்பின், அவருக்கு, முந்தி இருந்த பலம் திரும்பி வரவே இல்லை. அதிக நாட்கள் வாழ்ந்திருக்கவும் முடியவில்லை. 1895-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் தேதி, அவர் உயிர் நீத்தார். அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தபொழுது ஒரு ஆங்கிலேயர் அவரைப் பற்றி எழுதுகையில், ''உயர்நீதி மன்றத்தின் கோபுரம் ஒன்று சரிந்துவிட்டது. அந்த நஷ்டத்தை ஈடு செய்ய எவராலும் இயலாது'' என்று வருந்தினார். நாட்டு மக்கள் தங்களது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அவருடைய ஞாபகச் சின்னம் ஒன்றை நிறுவ மனமுவந்து நன்கொடை அளித்தனர். சலவைக் கல்லினாலான அவருடைய உருவம் சென்னை உயர் நீதி மன்றத்தில் நிறுவப்பட்டிருக்கிறது.

முத்துசுவாமி ஐயர் இன்று நம்மிடையே இல்லை. ஆனால் அவருடைய நன்னெறியும், எளிய வாழ்வும், புகழும் நின்று நிலவி வருகின்றன. நாம் மறக்க முடியாத பெரியோர்களில் முத்துசுவாமி ஐயரும் ஒருவராவார்.

[பாரதப் பெரியார்கள் (நான்காம் பாகம்) என்னும் நூலில் இருந்து..]

*[நன்றி: பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு].*



## நெல்லை மாவட்டத்தில் 1000 புதிய கிணறுகள்

தொடர்ச்சியான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நெல்லை மாவட்ட விவசாய மக்களின் நலன் கருதி அம்மாவட்டத்தில் 20 அம்சத் திட்டத்தின் கீழ், பாசன வசதியைப் பெருக்கிட, யுத்தகாலச் சேவை போன்று 1000 கிணறுகள் தோண்டும் திட்டத்தைக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மிக வேகமாகச் செயல்படுத்தி வருகின்றன. இதுவரையில் இத்திட்டன்கீழ் 428 கிணறுகளுக்கு ரூ. 36 இலட்சம் நீண்டகாலக் கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. நிலத்தடி நீரை விவசாயததுக்குப் பயன்படுத்தும் இந்தச் சிறப்புப் பணியால் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நாங்குனேரி, செங்கோட்டை, புதுக்கோட்டை, திருச்செந்தூர், வள்ளியூர் ஆகிய கூட்டுறவு நிலவள வங்கிகள் ஈடுபட்டுள்ளன. புதிய கிணறு வெட்ட, ஏற்கெனவே உள்ள கிணற்றை ஆழப்படுத்த, நீர் இறைக்கும் பொறி பொருத்த ஆகிய பணிகளுக்காக விவசாயிகளுக்கு இந்த வங்கிகள் தயங்காது வழங்கி வரும் கடன் உதவிகள் மூலம் விவசாயத் தொழிலை அவர்கள் மயங்காது செய்து பயன் கண்டு வருகிறார்கள். ரூ. 5,000 முதல் 15,000 வரை தேவையைப் பொறுத்து இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கு ரூ. 3,000 வரையிலும் மானிய உதவியும் வழங்கப்படுகிறது. நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து, காடுகளைக் கழனியாக்கி, உற்பத்தியைப் பெருக்கிட 20 அம்சத் திட்டத்தின் வெற்றிக்கு வழி வகுக்கும் '1000 கிணறுகள் திட்டம்' இம்மாவட்ட மக்களிடையே மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.



# இந்தியாவை உணர்க!

"இந்தியாவை உணர்க!" என்ற கருத்தினை மையமாகக் கொண்ட சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி தற்பொழுது சென்னையில் நடைபெற்று வருகிறது.

இந்திய ஒருமைப்பாட்டிற்குச் சுற்றுலா உதவுவதாலும், இந்தியாவின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை எடுத்துக்காட்டுவதாலும், வேளாண்மை, தொழில், மற்றும் இதரத் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் படம் பிடித்துக் காட்டுவது போலப் பாங்குற விளக்குவதாலும் இப்பொருட்காட்சிக்கு "இந்தியாவை உணர்க!" என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழகச் சுற்றுலா வளர்ச்சி வாரியத்தினரால் 4-வது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி இது. சென்னை கோட்டை அருகே யுத்த நினைவுச் சின்னம் அருகில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருக்கும் இப்பொருட்காட்சி 2-1-1977-ல் தொடங்கப் பெற்றது. இக் கண்காட்சி பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதி வரை சுமார் 2 மாத காலம் நீடிக்கும்.

இப்பொருட்காட்சியை 2-1-1977 அன்று மாலை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைப்பதாக இருந்தது. எதிர்பாராத விதமாகக் குடியரசுத் தலைவர் அவர்களின் உடல் நலம் குன்றியதன் காரணமாக, அவருக்குப் பதில் தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாதியா அவர்கள் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள், சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சித் திறப்பு விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அவர் தமது வரவேற்புரையில், "தமிழ்நாடு சுற்றுலா வாரியமும், மத்திய அரசும், மாநில அரசுத் துறைகளும், பிற மாநில அரசுகளும் இப்பொருட் காட்சியை அமைப்பதற்கு மனமுவந்து அளித்த ஒத்துழைப்பு மனதைத் தொடுவதாக அமைந்துள்ளது" என்று குறிப்பிட்டார். மேலும் அவர், "அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு உதவும் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு மட்டுமல்லாது, தேசிய ஒருமைப்பாடு செழித்தோங்கவும், உள்நாட்டுச் சுற்றுலாவை வளர்க்கவும் இது போன்ற சுற்றுலாப் பொருட்காட்சிகள் உதவும்" என்று கூறிச் சுற்றுலாப் பொருட்காட்சியின் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியைத் திறந்து வைத்த தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், தமது உரையில் சுற்றுலா







"இந்தியாவை உணர்க!" என்ற கருத்தினை மையமாகக் கொண்ட 1977-ஆம் ஆண்டின் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியைத் தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன் லால் சுகாதியா அவர்கள் 2-1-1977 அன்று மாலை துவக்கி வைத்தார்.

வின் இன்றியமையாமையைப் பின்கண்டவாறு எடுத்துரைத்தார்.

''ஏராளமான அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொடுக்கும் சுற்றுலாத் துறை கடந்த சில ஆண்டுகள் வரை உதாசீனம் செய்யப்பட்ட ஒரு துறையாக இருந்து வந்தது. ஆனால் சுற்றுலா வாரியங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவை எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு பிறகு அந்நியச் சுற்றுப் பயணிகளை ஈர்க்கும் நம் முயற்சி சீரிய முறையில் வெற்றி பெற்று வருகிறது.

''தென்னிந்தியாவைப் பார்க்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு, தமிழ்நாடு மிகக் கவர்ச்சியான தன்மைகளோடு விளங்குகிறது.

''இந்தியாவுக்கு வரும் அந்நியச் சுற்றுலாப் பயணிகளில் 25 சதவிகிதம் பேர்கள்தான் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். இந்த எண்ணிக்கையை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் 40 சதவிகிதமாக உயர்த்த வேண்டும்.

''மாநிலங்கள் மட்டத்தில் நடைபெறும் பொருட்காட்சிகள் அகில இந்திய மட்டத்தில் இப்போது உருவாகி வளர்ந்துள்ளது. சர்வ தேச அளவில் நமது நாட்டுப் பொருட்காட்சிகள் விரிந்து, இந்திய நாட்டு சமூகம், அதன் கலைகள், தொன்று தொட்டு நாம் காப்பாற்றி வரும் நமது பண்பாடு ஆகியவைகளை உலகுக்கு எடுத்து இயம்பும் நாட்கள் எதிர்காலத்தில் வரும் என்று நம்புகின்றேன்''

இவ்வாறு ஆளுநர் அவர்கள் தமது திறப்பு விழா உரையில் குறிப்பிட்டார்.

மனத்திற்கு மகிழ்ச்சியும் அறிவுக்கு விருந்தும் அளிக்கும் அரங்குகளும், கைவினைப் பொருள் அங்காடிகளும், தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா இடங்கள் பற்றிய ஒலி–ஒளி நிகழ்ச்சிகளும் பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன. கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு நிறைய அரங்குகள் இடம் பெற்றுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட எழில்மிகு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் 20 அரங்குகளும், நாகாலாந்து, பாண்டிச்சேரி, அரியானா, கர்நாடகம், காஷ்மீர்,

கேரளம், கோவா, டையூ, டாமன் ஆகிய மாநில அரசுகளின் அரங்குகளும் பொருட்காட்சியில் அங்கம் வகிக்கின்றன. ஏராளமான தனியார் அரங்குகளும் உள்ளன.

வழக்கம் போல அரங்குகளை அமைக்காமல் எதனையும் கண்ணார நேரில் பார்த்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் வகையில் இந்த ஆண்டு, பொருட்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரங்குகள் எல்லாம் வழக்கமான பாணியைத் தவிர்த்து நவீன முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கண்காட்சியின் ஒரு பக்கம், தஞ்சாவூர்க் கோயில் நந்தியைப் போல் ஒரு நந்தி 50 அடி உயரத்தில் அமைக்கப்பட்டு அது அனைவரின் கண்களையும் கவர்கிறது.

நந்தியின் வாயில் நுழைந்தால் அதன் வயிற்றுப் பகுதிக்குள்ளிருந்து ஒலி-ஒளி நிகழ்ச்சியைக் காணலாம். தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா இடங்கள் பற்றி இந்த ஒலி-ஒளி நிகழ்ச்சியில் சித்தரிக்கப்படுகின்றது.

''மாதிரி கிராமம்'' ஒன்று இங்கே நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. எந்த ஆண்டும் இல்லாத விதத்தில் இந்த ஆண்டு பாம்புப் பூங்கா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் முதலைகளும் உள்ளது.

பலவிதப் பாம்புகளையும் மற்றும் ஊர்ந்து செல்லும் பிராணிகளையும், அவைகளின் புகைப்படங்களையும் காணலாம். அவைகள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. கண்காட்சிக்குள் செல்







லும் கூவத்தின் மீது இராணுவத்தினர் அமைத்துக் கொடுத்த ஒரு பாலமும், நெடுஞ்சாலைத்துறையினர் கட்டிக் கொடுத்த ஒரு பாலமும் உள்ளன. அவைகள் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிச் சாலைக்கு வருகிற மக்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ஜனவரி 2-ஆம் தேதியன்று ஆரம்பித்த இந்தப் பொருட்காட்சியை 12-1-1977 வரை ஒரு இலட்சத்து 2 ஆயிரம் பேர் பார்வையிட்டிருக்கிறார்கள் என்று தமிழ்நாடு சுற்றுலா வாரிய நிர்வாக இயக்குநர் திரு. சி. ராமச்சந்திரன் அவர்கள் 12-1-1977 அன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இப்பொருட்காட்சியை நாள் தோறும் 10 ஆயிரம் பேர் பார்வையிட வருகிறார்கள் என்றும், ஞாயிறன்று பார்வையிட வருகிறவர்களின் எண்ணிக்கை சாதாரண நாட்களை விட நான்கு மடங்கு அதிகமாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழக அரசின் செய்தி விளம்பரத் துறையினர் அமைத்துள்ள அரங்கில் தமிழ்நாட்டில் இருபது அம்சத் திட்டம் நிறைவேற்றப் படுவது சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இறந்தும் இறவாப் புகழ் பெற்ற அரசியல் தலைவர்களின் படங்களும், இந்த அரங்கின் அழகினை உயர்த்துகின்றன.





அளவான குடும்பத்தின் அவசியத்தை உணர்த்தும் குடும்ப நலத் துறையினரின் அரங்கில் குடும்ப நலத் திட்டம் எவ்வளவு அவசியமானது என்பதை எடுத்து விளக்குவதோடு, இலகுவானது என்பதையும் விளக்கிக் கூறுகிறார்கள்.

மினி ரயில், பாம்புப் பண்ணை ஆகியவை பொருட்காட்சியின், சிறப்பு அம்சங்களாகத் திகழ்கின்றன.

பொழுது போக்கு அம்சங்களான ராட்சத ராட்டினம், ரங்க ராட்டினம், அழகுப் போட்டி, நாய்க் கண்காட்சி, படகுப் போட்டி, குழந்தைகள் ரயில் வண்டி, ஒலி, ஒளி நிகழ்ச்சிகள் ஆகியவைகளும் உண்டு.

கண்காட்சி பார்க்க வருபவர்களின் வசதியை முன்னிட்டுப் பேருந்துப் போக்குவரத்து வசதிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொல்லப்போனால் இப்பொருட்காட்சி, பொழுது போக்கிற்கு ஏற்றதாக இருப்பதோடல்லாமல், மனத்திற்கு மகிழ்ச்சியும், அறிவிற்கு விருந்தும் அளிப்பதாகவும் இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழிகோலுவதாகவும் அமைந்துள்ளது.

எனவே, தற்பொழுது சென்னை நகரில் நடைபெற்று வரும் சுற்றுலாப் பொருட்காட்சியைக் காண வாரீர் என்று அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.





# கள்ளக்கடத்தல் தடுப்பு இயக்கம்

நம் நாட்டிற்குள் தடை செய்யப்பட்டிருக்கிற பொருட்களை வெளிநாட்டிலிருந்து கள்ளக் கடத்தல் செய்து கொண்டு வருபவர்கள் மீதும் அந்நியச் செலாவணி வியாபாரத்தில் சட்ட விரோதமாக ஈடுபட்டிருப்பவர்கள் மீதும் அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க முடிவு செய்திருக்கிறது. பிரதம மந்திரியின் 20-அம்சத் திட்டத்தில் இது முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. 1975 ஜூன் மாதத்திற்கு முன்னும் அரசாங்கம் இவர்கள் மீது நடவடிக்கை எடுத்துத்தான் வந்தது; ஆனால் அப்போதெல்லாம் சட்டத்திலுள்ள ஓட்டைகளைக் காரணம் காட்டியும், நீதிமன்றத்தில் வழக்காடியும் சமூக விரோதிகள் தப்பித்து வந்தார்கள்.

ஆனால் நிலைமை கட்டுக்கடங்காத அளவு பெரிதாக உருவெடுத்தது. வழக்கமான சட்டங்களின் மூலம், சமூக விரோதிகளைச் சமாளிக்க இயலாது என்பதை அரசாங்கம் உணர்ந்தது. ஆகையால் கள்ளக்கடத்தல்காரர்கள், அந்நியச் செலாவணியை மோசம் செய்பவர்கள், அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்கள் ஆகியோரை விசாரணையிலிருந்து தடுப்புக் காவலில் (சிறையில்) வைத்திருக்கும் உரிமையை அரசாங்கம் தனக்கு வழங்கிக் கொண்டது. 'மிசா' என்னும் 1971-ஆம் ஆண்டு உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தி, 1974, செப்டம்பரில் அரசாங்கம் இந்த அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டது. அதே ஆண்டு டிசம்பர் மாதத்தில் அந்நியச் செலாவணியைப் பேணுவதற்கும் கடத்தல் நடவடிக்கையைத் தடுப்பதற்குமாக சட்டம் புதிதாக உருவாக்கப்பட்டது.

அவசர கால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டதிலிருந்து கடத்தல் பேர்வழிகள், அந்நியச் செலாவணி மோசடிக்காரர்கள், அவர்களுக்கு உறுதுணையாக ஒத்துழைப்பவர்கள் ஆகிய அனைவர்மீதும் நடவடிக்கை தீவிரமான முறையில் எடுக்கப்பட்டது. உயர் நீதிமன்றங்கள் சிலவற்றின் தீர்ப்புக்களால் ஏற்பட்ட சிக்கல்களும், பிரச்சினைகளும் மேலும் சில புதிய திருத்தங்கள் மூலம் சமாளிக்கப்பட்டன.

**கறுப்புப் பணம்**

கடத்தல் என்பது சட்ட விரோதமாக நம்நாட்டுக்குள் தங்கம், வைரம், கைக்கடிகாரங்கள், செயற்கை இழைகளாலான துணிவகைகள், ஆடம்பர வாழ்க்கை வாழ்பவர் உபயோகிக்கும் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு வருவதாகும். இது



தவிர, இந்தியாவிலிருந்து, சட்ட விரோதமாக பழமையான கலைச் செல்வங்கள், வெள்ளி, அபின், புலித்தோல்கள், பாம்புத் தோல்கள் முதலியவற்றை வெளிநாடுகளுக்குக் கொண்டு போவதும் கள்ளக்கடத்தலே ஆகும்.

வெளிநாடுகளில் செய்யப்பட்ட பொருட்களைக் கடத்தி வந்து விற்பதால், இதைத் தொழிலாக உள்ளவர்கள் நிறைந்த இலாபம் சம்பாதிக்கிறார்கள். இந்த இலாபமே இவர்கள் இந்தத் தொழிலைச் செய்வதற்குக் காரணமாக இருக்கிறது. விலை கூடிய வெளிநாட்டு டெலிவிஷன் செட்டுகள், டேப் ரிகார்டுகள் எனப்படும் ஒலிப்பதிவுக் கருவிகள், ஒலிப்பதிவு செய்ததைக் கேட்க உதவும் கருவிகள், ஸ்னோ, முகப் பவுடர் போன்ற வாசனைப் பொருட்கள் ஆகியவற்றை வைத்திருப்பது அந்தஸ்தின் அறிகுறியாகக் கருதப்படுகிறது. பணக்காரர்கள் தங்களுடைய கறுப்புப் பணத்தைக் கொடுத்து இந்தப் பொருட்களை வாங்கிக் கள்ளக்கடத்தலை ஊக்குவிக்கிறார்கள். கொலை, திருட்டு, ஆகியன போலவே கள்ளக்கடத்தல் பொருட்களை வாங்குவதும், விற்பதும் கடுமையான குற்றமாகும்.



**சமூக விரோதக் குற்றங்கள்**

கள்ளக்கடத்தல் செய்யப்படும் போது அந்தப் பொருட்களின் மீது செலுத்த வேண்டிய சுங்க வரியைச் செலுத்தாமல் அரசாங்கத்தை ஏமாற்றி விடுகிறார்கள். கள்ளக்கடத்தல்தான் கறுப்புப் பணத்தை உருவாக்குகிறது. காரணம், கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள்தான் அதைக் கொடுத்து,கடத்தல் பொருள்களை வாங்குகிறார்கள். கள்ளக் கடத்தலால் நமது அந்நியச் செலாவணி நிலைமை பாதிக்கப்படுகிறது. கள்ளக்கடத்தல்காரர்கள் அந்நியச் செலவாணியைக் கொண்டு, தேவையில்லாத பொருட்களை வெளிநாடுகளில் வாங்குவதும் நம் நாட்டின் முக்கியமான பொருட்களைத் திருட்டுத்தனமாக வெளியேற்றி அந்நியச் செலாவணியைப் பெறுவதுமாக இருக்கிறார்கள். இதனால் நாட்டு மக்களுக்குத் தேவையான உணவையோ, விவசாய வளர்ச்சிக்குத் தேவையான உரங்களையோ, தொழிற் பெருக்கத்திற்குத் தேவைப்படும் இயந்திரங்கள், மூலப் பொருட்கள், கச்சா எண்ணெய் முதலியவற்றையோ வாங்குவதற்கு நமக்குப் பயன்பட வேண்டிய அந்நியச் செலாவணி கிடைக்காமல் போய் விடுகிறது.- சில சமயம் கடத்தல் காரர்கள் வனஸ்பதி, சமையல் எண்ணெய் ஆகியவற்றையும் வெளிநாடுகளுக்குக் கடத்தி, நம் நாட்டில் பற்றுக்குறையை உண்டாக்குகிறார்கள்.

கள்ளக்கடத்தல்காரர்கள் பேராசை உடையவர்கள். நம் நாட்டின் கலைச் செல்வத்துக்கு அவர்கள் இழைக்கும் கொடுமை சொல்லி முடியாது. கல்லில் செதுக்கப்பட்ட அழகான விக்கிரகங்கள், ஒப்புயர்வு இல்லாத செப்புத் திருமேனிகள், பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட வண்ண ஓவியங்கள் ஆகியவற்றை யெல்லாம் கோயில்கள், மடங்கள் ஆதீனங்கள், கலைக்காட்சிக் கூடங்கள் ஆகியவற்றிலிருந்து திருடி வெளிநாடுகளுக்கு அப்புறப்படுத்துகிறார்கள். அரசாங்கம் உரியகாலத்தில் எடுத்த நடவடிக்கைகளாலும், வழக்குகளாலும் உலகப் புகழ் பெற்ற சிவபுரம் நடராஜர் திருவுருவம் மீண்டும் நம்நாட்டுக்கு வர ஏற்பாடாகியிருக்கிறது. சம்பாவில் இருந்த மிக முக்கியமான விஷ்ணு விக்கிரகம் அரசாங்கத்தின் முயற்சிகளால் தான் கடத்தல்காரர்களிடமிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறது.

ஒரு திருடனோ, கொலைகாரனோ செய்யும் செயலால் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் கடத்தல்காரர்களின் செயலால் ஒருநாடும் அதில் வாழும் கோடிக்கணக்கான மக்களும் நஷ்டமடைகிறார்கள். சில சமயம் கள்ளக்கடத்தல்காரர்கள் தங்கள் வசமுள்ள கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து, கிளர்ச்சிகளையும், மத அல்லது ஜாதி அடிப்படையில் உள்நாட்டுக் கலவரங்களையும், சமூக விரோத, தேச விரோத செயல்களையும் தூண்டி விடுகிறார்கள்.



## நாடு முழுவதும் நடவடிக்கை

கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு சுங்கவரித் துறையைச் சேர்ந்தது. கடத்தல்காரர்களிடம் ஏராளமான பணமும், ஆள்பலமும், சட்ட நுணுக்கங்களைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறி ஆதரவும் தைரியமும் தரும் வழக்கறிஞர் கூட்டமும் இருக்கிறது. இதை எல்லாம் சமாளிக்க, சம்பந்தப்பட்ட சட்டங்கள் யாவும் திருத்தப்பட்டு 1974 செப்டம்பர் முதல் சுங்கவரித்துறையால் நாடு முழுவதும் பெரிய அளவில் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக சுங்கவரித் துறையில் கூடுதலான ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள். கடத்தல்காரர்களும் அவர்களுடைய நெருங்கிய நண்பர்களும் உறவினர்களும் மட்டுமின்றி அவர்களோடு சம்பந்தப்பட்ட பலவகையான பேர் வழிகளைப் பற்றியும் விவரங்கள் சேகரிக்கவும், விசாரிக்கவும் துப்பறியும்பகுதி விரிவாக்கப்பட்டது. வீடுகள் முதலியவற்றில் போய் ஏராளமான சோதனைகள் செய்யப்பட்டன. கடற்கரைகளில் கேந்திரமான இடங்களில் வேவு பார்க்கும் வேலை பெரிதும் மேற்கொள்ளப்பட்டது.



மேற்குக் கடற்கரை எங்கும் வேகமாகச் செல்லும் படகுகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன. மேற்குக் கடற்கரையிலும், தமிழ் நாட்டுக் கடற்கரையிலும், இந்திய-பாகிஸ்தான் எல்லைகளிலும் 'வயர்லஸ்' தகவல் தொடர்பு வசதி மிக விரிவாகச் செய்யப்பட்டது. இதனால் நம் நாட்டு அதிகாரிகளுக்கு, கடத்தல்காரர்களைப் பற்றிய ரகசியங்கள் நம்பிக்கையான முறையில் உடனுக்குடன் கிடைக்க வழி செய்யப்பட்டது.



கள்ளக்கடத்தல்காரர்கள் தாங்கள் கையாளும் முறைகளையும் உத்திகளையும் அடிக்கடி மாற்றுகிறார்கள். அவற்றை முறியடிக்க அரசாங்கமும் புதிய தந்திரங்களைக் கையாளுகிறது. விமானங்களிலும் கப்பல்களிலும் செல்லுபவர்களின் மூலமாகவும் கடத்தல்காரர்கள், பொருட்களை அனுப்புகிறார்கள். மேற்குக் கடற்கரையிலிருந்து செல்லும் சரக்குக் கப்பல்களிலும், பாரசீக வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் சரக்குக் கப்பல்களிலும் ஊடுருவித் தங்கள் பொருட்களை அனுப்பப் பார்க்கிறார்கள். இந்த முயற்சிகள் யாவும் இப்போது முறியடிக்கப்பட்டு விட்டன.

கள்ளக்கடத்தலிலும், அந்நியச் செலாவணி மோசடியிலும் ஈடுபட்டிருப்பவர்களும், அவர்களுக்கு உடந்தையாக இருப்பவர்களும் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி சிறையில் வைக்கப்பட்டிருப்பதால் கடத்தல் பொருட்கள் முன்போலச் சுலபமாகக் கிடைக்கவில்லை.

## கடும் நடவடிக்கைகள்

1976 டிசம்பர் 25 வரை 3,118பேர் அந்நியச்செலாவணிப் பாதுகாப்பு, கள்ளக்கடத்தல் தடுப்பு சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் 2,111 பேர் அவசர கால நிலை பிரகடனமான பிறகு காவலில் வைக்கப்பட்டவர்கள். அதே தேதிக்கு உரிய கணக்குப்படி இன்னும் காவலில் வைக்கப்பட வேண்டியவர்களில், 443 பேர் தலைமறைவாக இருக்கிறார்கள். அவர்களில் 268 பேரைத் தேடிப் பிடிக்கவும், அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் ஆவன செய்யப்பட்டிருக்கிறது. தலை மறைவாக இருக்கிற 37 பேருக்குச் சொந்தமான

சுமார் ஒரு கோடி மூன்று இலட்சம் ரூபாய் சொத்தைப் பறிமுதல் செய்ய நீதிமன்றங்கள் உத்தரவிட்டிருக்கின்றன. தலைமறைவாக இருக்கும் கடத்தல்காரர்களின் போட்டோக்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. அவர்களைப் பிடித்துக் கொடுக்க உதவுபவர்களுக்கும், துப்புக் கொடுப்பவர்களுக்கும் அரசாங்கம் பரிசு வழங்குகிறது. இப்படிப்பட்ட பலவகையான நடவடிக்கைகளால், ''கடத்தல் மன்னர்கள்'' என்று புகழும் செல்வாக்கும் பெற்றிருந்தவர்களெல்லாம் இப்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்!



**முறை தவறி ஈட்டிய சொத்து**

கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதை அனுமதிக்கும் வகையில் ஒரு புதிய சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டப்படி 2,500 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுவரை அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் அடங்கியவர்களுடைய சொத்துக்களின் மதிப்பு 50 கோடி ரூபாய்க்கு மேற்பட்டதாகும்.



**கடத்தல் வியாபாரம் சரிகிறது**

அரபு நாடுகளிலிருந்து படகுகளில் கடத்தல் செய்த காலம் மலையேறிவிட்டது. 1976-ல் நவம்பர் வரை 11 மாதங்களில் 32 கோடி ரூபாய் மதிப்புள்ள கடத்தல் பொருட்கள் மட்டுமே கைப்பற்றப்பட்டன. இதற்கு முந்திய ஆண்டுகளில் கைப்பற்றப்பட்ட பொருட்களின் அளவை நோக்க, இப்போது அவர்கள் சோர்வடைந்திருக்கின்றனர் என்பது தெரிகிறது.

வெளிநாடுகளிலிருந்து 'ரேயான்', 'நைலான்' துணிவகைகளைக் கடத்துவது மிகவும் குறைந்து விட்டது. இந்திய-நேபாள எல்லையிலும் கள்ளக்கடத்தலின் வேகம் முன்போல இல்லை.



**வீடுகளில் சோதனைகள்**

ஏராளமான வீடுகளில் சோதனைகள் நடந்தவண்ணமாய் இருக்கின்றன. இதற்கு முந்திய ஆண்டுகளில் நடைபெற்ற சோதனைகளின் எண்ணிக்கை, குறைவு. அப்போது பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பை நோக்க 1976-ல் கூடுதலான சோதனைகளில் கிடைத்த பறிமுதல் பொருட்களின் மதிப்பு குறைவாக இருக்கிறது. அரசாங்கத்தின் முயற்சிகள் வெற்றியடைந்திருப்பதற்கு இது அறிகுறி.

**வந்து சேரும் அந்நியச் செலாவணி**

வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டுக்கு வரக்கூடிய பணங்களை கள்ளக்கடத்தல்காரர்கள் பெற்றுக் கொண்டு, அதற்குப் பதிலாக இந்தியாவில் இந்திய ரூபாயைக் கொடுத்து வந்தார்கள். இதனால் நம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய அந்நியச் செலாவணி அரசாங்கத்திற்குக் கிடைக்காமல் போய்விட்டது. இந்த நிலை இப்போது மாறிவிட்டது. முறைப்படி பாங்குகள் மூலம் அனுப்பப்பட்ட தொகை 1974-ல் ரூபாய் 569.31 கோடியாக இருந்து, 1975-ல் ரூபாய் 1,053.76 கோடியாகப் பெருகி, 1976-இல் முதல் 11 மாதங்களில் மட்டும் ரூபாய் 1,376.58 கோடியாக உயர்ந்துள்ளது.

சர்வதேச மார்க்கெட்டில் இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்திருக்கிறது. இந்திய ரூபாய்க்குப் பாங்குகள் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணிக்கும் கள்ள மார்க்கெட்டில் கிடைக்கும் அந்நியச் செலாவணிக்கும் இடையே இருந்து வந்த இடைவெளியும் மிகவும் குறைந்துவிட்டது.

கடத்தல்காரர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளால் பண்டங்களைச் சேமித்து வைப்பதில் கறுப்புப் பணத்தை முடக்கி நடத்தும் சூதாட்டம் அடக்கப்பட்டுவிட்டது. பினாமியாகச் சொத்துக்களை வாங்குவது, கறுப்புப் பணத்தை வைத்து வீடு கட்டுவது ஆகியவை எல்லாம் பழைய கதையாக, பகல் கனவுகளாக ஆகிவிட்டன.



**பொதுமக்களின் ஒத்துழைப்பு**

பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் அரசாங்கம் மேற்கொள்ளும் எந்த முயற்சியும் வெற்றி பெறாது. கள்ளக் கடத்தல் மீண்டும் தலை தூக்காதபடி செய்வது, பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பொறுத்தது. நம் நாட்டில் செய்யப்படும் பொருட்கள் வெளிநாட்டுப் பொருட்களுக்கு எந்த விதத்திலும் மட்டம் இல்லை. தரத்திலும் விலையிலும் நம் உற்பத்திகள் வெளிநாட்டுப் பொருட்களுடன் போட்டியிடக்கூடியவை.

''நான் இந்தியன், இந்தியாவில் செய்யப்பட்ட பொருட்களையே நான் வாங்குவேன்'' என்ற உறுதிமொழியை நம் நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் எடுத்துக் கொள்ள வேண்டும். கடத்தல் பொருட்களை நாம் வாங்கக் கூடாது. அயல்நாட்டவர் ஆட்சி நடந்தபோதே 'வெளிநாட்டுப் பொருட்களை வாங்காதீர்' என்று மகாத்மா காந்தி, நமக்கு அறிவுறுத்தினார். சுதந்தரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகாவது நாம் சுதேசி மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எழில் தவழும் அலங்காரத்
துணி வகைகளைக் கொண்ட
தனி அலங்காரத் துணிப் பகுதி

# வானவில்

## கோ-ஆப்டெக்ஸ் ஷோரூமில்



உங்கள் இல்லத்துக்கு அல்லது அலுவல
கத்திற்கு எழில் கூட்டும் வகைவகையான
அலங்காரத் துணிகள், நவீன வடிவமைப்புகள்,
உள்ளங்கவர் டிசைன்கள் வண்ண
வகைகள்.

அலங்காரத் துணிகள், படுக்கை விரிப்புகள்,
தலையணை உறைகள் போன்ற வசீகர
அலங்காரத் துணி வகைகளை வாங்க ஏற்ற இடம்.



கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி



# வானவில்

85 அண்ணாசாலை, சென்னை 600 018 தொலைபேசி: 444236
ஞாயிறு விற்பனை உண்டு. கார் நிறுத்த இடவசதி உண்டு

தமிழகத்திலுள்ள இதர கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

# அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் அனைத்துலகக் கருத்தரங்கு

தில்லையிலே உள்ள அண்ணுமலைப் பல்கலைக் கழகம் செட்டி நாட்டரசர் குடும்பத்தின் கொடைத் திறத்திற்கு நிலைத்த சான்ருய் இருந்து புகழ்பரப்பி வருவதுடன், புதுமைகளை ஏற்றுச் செயல்படுத்தும் பல்கலைக் கழகமாகத் திகழ்கிறது. அதன் துணை வேந்தராய் இருப்பவர் உலகப் புகழ்பெற்ற மக்கள் தொகையியல் அறிஞர் சிலருள் ஒருவரும், இந்திய அரசின் முன்னுள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சருமான டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்களாவார். மக்கள் தொகையியல் கல்வி, மாணவர்களுக்கு அளிக்கப் பட வேண்டும் எனத் தேசிய மக்கள் தொகைக் கொள்கை கூறுவதற்கு ஏற்ப, டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரான பின், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் மக்கள் தொகையியல் கல்விக்கான நிலையம் ( Centre for Population Studies ) ஒன்றை அமைத்து ஆராய்ச்சித் துறை மாணவர்கள் பலர் அதில் ஆராய்ச்சியில் ஈடுபட வழிவகை செய்தார்.

இன்றைய உலகின் பெரும் பிரச்சினையாய் இருந்து வருவது மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை பற்றிய விவரங்களை இளைய சமுதாயத்திற்கு-மாணவ, மாணவிகளுக்கு விளக்கிக் கூறி அவர்களது வாழ்வில் சிறு குடும்ப நெறியை நீங்காது இடம் பெறச் செய்தால் எதிர்கால இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கம் ஒரு பிரச்சினையாக இருக்காது எனலாம்.

"Population Education holds promise not only as a means of diffusing information about population problems more pervasively in a country than can be done by the channels ordinarily available to family planning programmes but as a means of bringing about desired changes in attitudes, behaviour and values in the next generation (which is almost here)" என்ற ஒரு கருத்திற்கிணங்க மக்கள் தொகையியல் கல்வி அடுத்த தலைமுறை சீராக வாழ வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் சிறப்பு வாய்ந்த மக்கள் தொகையியல் கல்வி நிலையம், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் ஒருபிரிவாக இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக் கழக மான்யக்குழு, தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் உதவியோடு மக்கள் தொகைக் கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகள் குறித்த அனைத்துலகக் கருத்தரங்கம் ஒன்றை (International Seminar on Problems of Fertility Control) அண்மையில் அண்ணுமலைப் பல்கலைக்



**இந்திய அரசின் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் 10.1.'77-ஆம் நாள், மக்கள் தொகைக் கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகள் குறித்த அனைத்துலகக் கருத்தரங்கைத் துவக்கிவைத்து உரையாற்றுகிருர். துணைவேந்தர் டாக்டர் எஸ். சந்திரசேகர், கலிபோர்னியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஆல்பர்ட் காட்ஸ் ஆகியோர் படத்தில் உள்ளனர்.**

கழகம் ஒரு வார காலம் நடத்தி முடித்துள்ளது.

இக்கருத்தரங்கை இந்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள் தலைமையில் 10-1-77 அன்று காலை துவக்கி வைத்தார். அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியரும், புகழ்மிக்க சமூக விஞ்ஞானியுமான டாக்டர் 'ஆல்பர்ட் காட்ஸ்' அவர்கள் சிறப்புரையாற்றினார்.

அனைத்துலகக் கருத்தரங்கினைத் துவக்கி வைத்து உரையாற்றிய மத்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், வறுமையும், கல்வியறிவின்மையும், தேவைக்குறைவான வளர்ச்சியும் பிறப்பு விகிதம் அதிகமாவதற்குரிய காரணங்களாகும் என்றும், அதிக அளவில் உள்ள பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டுமானால் வறுமை, பசி, கல்வியறிவின்மை, வேலையில்லா நிலை, ஊட்டச்சத்துக் குறைவான நிலை நோய் ஆகியவற்றைக் கடுமை தணியாத தொடர்ந்த பணிகளால் போக்க வேண்டும் என்றார். அதே நேரத்தில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டிற்கான கொள்கைகளைச் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதோடு அவசியமான சமுதாயத் தொண்டிற்கும் ஆவன செய்ய வேண்டுமென்றும் கூறினார். வறுமை, அதிகமான பிறப்பு விகிதம் ஆகியவை இணைந்த நச்சு வட்டத்தை உடைக்க நாம் எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

''கருத்தடை தனி மனிதனுக்கு எப்படி உதவுகிறது? வாழ்வின் தரத்தை உயர்த்துவதற்கு எந்த வகையில் அது உதவியாக இருக்கிறது? தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் எப்படிப்பட்ட நன்மைகளை அது நல்குகிறது?'' இப்படிப்பட்ட வினாக்கள் அடிக்கடி கேட்கப்படுவதும், அவற்றிற்கான பதில்கள் சொல்லப்படுவதும் யாவரும் அறிந்தது என்றாலும், திரும்பத் திரும்பச் சொல்லுவதற்கு ஏற்புடையவையல்ல.

எந்த ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்திலும் இந்தியாவில் 2 கோடித் தாய்மார்கள் கர்ப்பமுற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரத்த சோகை நோய்க்காளானவர்களாக இருக்கிறார்கள். உண்மையிலேயே மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே உடல்நலத்தோடு உள்ளார்கள். நம் நாட்டில் தாய்மார்கள் இறப்பதற்கு, அவர்களிடையே உள்ள சத்துக் குறைவு மட்டும் காரணமல்ல. 10 முதல் 20 சதவிகித தாய்மார்கள் இறப்புக்குக் காரணம் அவர்களிடையே உள்ள சத்துணவுக் குறைவும், இரத்த சோகை நோயும் தான்!



அனைத்துலகக் கருத்தரங்கில் கலிபோர்னியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஆல்பர்ட் காட்ஸ் சிறப்புரையாற்றுகிறார்.

தாய்மார்களிடையே உள்ள சத்துணவுக் குறைவு அல்லது பற்றுக்குறை காரணமாகவும், பொதுவான உடல்நலக் குறைபாடு காரணமாகவும் நமது தேசத்தில் பிறக்கும் குழந்தைகளில் 17 சதவிகிதத்தினர் குறை மாதக் குழந்தைகளாகப் பிறக்கின்றனர். நமது நாட்டில் இறக்கின்ற நான்கு வயதுக்குக் குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை அளவு 40 சதவிகிதமாக உள்ளது. வளர்ச்சி பெற்ற நாடுகளில் இந்நிலை 17 சதவிகிதமாகவே இருக்கிறது. பிறக்கும் குழந்தைகள் நிச்சயமாக உயிர்வாழா என்ற அவநம்பிக்கையே, அதிகக் குழந்தைகளைப் பெறக் காரணமாவதுடன், நச்சு வட்டத்தை உறுதிப்படுத்தவும் செய்கிறது.

நமது நாட்டு மொத்த மக்கள் தொகையில் ஆண்களின் எண்ணிக்கை அதிகம் என்பது. இந்திய மக்கள் தொகைக் கணிப்புக்கள் ( Census ) காட்டும் உண்மையாகும். பெண்கள் பிள்ளைப் பேற்றால் இறப்பதும், குழந்தைப் பருவத்திலும், பெரியவர்களான பின்பும் 'பெண்கள் தானே' என அவர்களை ஒதுக்குவதும் இதற்குரிய காரணங்கள் ஆகும். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பின்படி இந்தியாவில் 1,000 ஆண்களுக்கு 930 பெண்கள் என்ற நிலை உள்ளது. அதே நேரத்தில் இரஷ்யாவில் 1,000 ஆண்களுக்கு 1,171 பெண்கள், அமெரிக்காவில் 1,055 பெண்கள், இங்கிலாந்தில் 1,060 பெண்கள் என்ற நிலை இருக்கிறது.

பெண்களது எண்ணிக்கை விகிதம் குறைந்து வருகிறது என்பது தெளிவு. பிள்ளைபெறும் பருவத்திலிருக்கும் 80 பெண்களில் ஒரு பெண் பிள்ளைப்பேற்றால் இறக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏழை எளிய சமுதாயத்தில் வாழும் பெண்கள், பிள்ளை பெறும் பருவம் முழுவதிலுமாக கருவுற்றவர்களாக அல்லது குழந்தைகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருப்பவர்களாக உள்ளார்கள்.



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 10.1.77-ஆம் நாள் மாலை கலிபோர்னியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஆல்பர்ட் காட்ஸ் தலைமையில் நடந்த விழாவில், மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், துணைவேந்தர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள் எழுதிய 'இந்தியாவில் மக்கள் தொகையும் சட்டமும்'', (Population and Law in India) என்ற நூலின் முதல்படியை திருமதி. சந்திரசேகர் அவர்களிடம் வழங்குகிறார்.

நமது நாட்டு மொத்த மக்கள் தொகையில் 20 முதல் 25 சதவிகிதப் பெண்கள் தேசிய வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஆகிய பணிகளில் ஈடுபடும் தகுதி படைத்தவர்களாவார்கள் என்றும், சத்துணவுக் குறைவு, உடல் நலக் குறைவு இவை காரணமாக நாட்டு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடும் பெண்களின் அளவு மிகக் குறைவாக உள்ளது. நடைமுறையில் பெண்களின் சக்தியை இழப்பது நாட்டிற்கு நட்டமேயாகும். இந்தப் பின்னணியை வைத்து நோக்கும்போது, இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுடன் சிறு குடும்பம் அமைத்து வாழும் குடும்பங்களின் தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோரிடையே சத்துணவுக் குறைவு ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நமது நாட்டில் 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 69 இலட்சம் பேர்கள் குடும்பநல நிரந்தரச் சிகிச்சை ஏற்றுள்ளனர். கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகளைவிட இது நான்கு மடங்குஅதிகமானதாகும். 1972-73-ஆம் ஆண்டு 31 இலட்சத்து 20 ஆயிரம் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் செய்யப்பட்டன என்பது ஒரே ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய சாதனையாகும். அதையும் மீறியதொரு சாதனை இந்தியாவில் இவ்வாண்டு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு 1976-77-ஆம் ஆண்டில் 5 இல்ட்சம் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் செய்து முடிக்க வேண்டுமென இலக்குத் தந்திருந்தது. 1977 ஜனவரி மாதம் 11-ஆம் நாள் முடிய தமிழ்நாட்டில் 5 இலட்சம் பேர்கள் நிரந்தரச் சிகிச்சை ஏற்றுவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்க, மகிழ்ச்சிகரமான செய்தியாகும். இவ்வாண்டு மார்ச் மாதத்திற்குள்ளாக தமிழ்நாட்டில் 6 இலட்சம் நிரந்தரச் சிகிச்சைகளை செய்து முடிக்க வேண்டுமெனத் தமிழ்நாடு அரசு தனக்குத்தானே வகுத்துக் கொண்ட இலக்கும் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வெற்றிக்கு இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் தன்னைத்தானே இதில் முழுக்க முழுக்க ஈடுபடுத்திக் கொண்டிருப்பதும், சமுதாயத் தலைவர்களின், சிறப்பாக வெவ்வேறு மதப் பிரிவினரின் முழு ஒத்துழைப்பும் காரணங்களாகும்.

''அடுத்த ஆண்டு குடும்பநலத் திட்டப் பணிகளுக்கென 123 கோடி ரூபாய் ஒதுக்கப்படக் கூடும். இதில் 50 கோடி ரூபாய் சேவைப் பணிகளுக்காக (Services and Supplies) ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று இந்திய நிதியமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டு, கருத்தரங்கம் வெற்றிகரமாக நடந்தேறத் தம் வாழ்த்துக்களைக் கூறி உரையை முடித்தார்.

அடுத்துச் சிறப்புரையாற்றிய கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் 'ஆல்பிரட் காட்ஸ்' அவர்கள், வளர்ச்சியும்-கட்டுப்பாடும் இந்தியாவில் ஓங்க அவசரநிலை பெரிதும் உதவி இருப்பது கண்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும், உண்மையிலேயே இதற்கெல்லாம் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் தலைமைதான் காரணம் என்றும் குறிப்பிட்டார்.

டாக்டர் காட்ஸ் மேலும் பேசுகையில், குடும்பநலத் திட்டம், தொழில் நுணுக்க அணுகுமுறையால் மட்டுமோ அல்லது விளக்கத் திட்டப் பணிகளற்ற நிலையிலோ வெற்றிபெறாது என்று கூறி, எந்த வகையான முறைகளில் விளக்கத் திட்டப் பணியாற்ற வேண்டும் என்று விளக்கமாக எடுத்துரைத்தார்.

இறுதியாகத் தலைமையுரையாற்றிய துணைவேந்தர் டாக்டர்



அனைத்துலகக் கருத்தரங்கைத் துவக்கி வைத்த மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம், 'குடும்பநலச் செய்திக்கதிர்' உள்ளிட்ட பல்வேறு குடும்ப நலத்துறை வெளியீடுகளை, செய்திக்கதிர் உதவி ஆசிரியர் திரு. எஸ். முத்துராம லிங்கம் சமர்ப்பித்தார்.

எஸ். சந்திரசேகர் அவர்கள், பிறப்பு விகிதம் அதிகமாக இருப்ப தற்கு 29 காரணங்கள் என்று தெளிவுபடுத்தி, அவைகளில் சிறப்பான நான்கு பற்றி விளக் கிக் கூறினர். தொடர்ந்து அவர் பேசுகையில் இந்தியப் பெண்கள் எழுச்சி பெற்று, புதுமைப் பெண் களாக மாறினல் அன்றி, நம் நாட்டில் மக்கள் தொகைப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க இயலாது என்றும், பெண் களை ஊக்குவிப்பதற்காக நாட்டில் உள்ள வேலைவாய்ப்புகளில் 40 சதவிகித அளவு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும், அதனல் அடுத்த பத்தாண்டு களில் நமது நாட்டுப் பிறப்பு விகிதம் 50 விழுக்காடு குறையு மென்றும் கூறினர்.

அன்று மாலை அண்ணுமலைப் பல்கலைக் கழக செனட் மண்ட பத்தில் நடந்த விழாவில் மத்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிர மணியம் அவர்கள், துணைவேந்தர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள் எழுதிய 'இந்தியாவில் மக்கள் தொகையும் சட்டமும்' (Population and Law in India) என்ற ஆங்கில நூலை வெளி யிட்டு, அந்நூலின் முதல் 'படி' யைத் திருமதி சந்திரசேகர் அவர்களிடம் வழங்கினர்.

இக்கருத்தரங்கு 14-1-'77 வரை நடந்தேறியது. தமிழ்நாடு அரசின் நல்வாழ்வு-குடும்பநலத் துறையின் ஆணையரும், செய லாளருமான திரு பி. முராரி அவர்களும், பல்வேறு பல்கலைக் கழகங்கள், மக்கள் தொகையியல் அமைப்புக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அறிஞர்களும் இந்த அனைத்துலகக் கருத்தரங்கில் கலந்துகொண்டு, எழுத்து வடிவில் தங்கள் எண்ணங்களை, அனுபவ உண்மைகளை வழங்கினர். சிறப் புற நடத்தப்பட்ட இந்த அனைத் துலகக் கருத்தரங்கைப் போல் விரிவான வகையில் சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களிலும், பிற இந்தியப் பல்கலைக் கழகங் களிலும் மக்கள் தொகையியலின் வெவ்வேறு கூறுகள் குறித்துக் கருத்தரங்குகளும் பிறவும் நடத் தப்பட்டால்-அவற்றிற்குப் பின் தொடர் நடவடிக்கைகள் எடுக் கப்பட்டால்-எதிர்காலச் சமு தாயம் பயன்பெறும் என்பதில் ஐயமில்லை!

—எஸ். முத்துராமலிங்கம்

## தேசீய குடும்பநல மாதம்

1977 பிப்ரவரி மாதத்தைத் தேசிய குடும்ப நல மாதமாக மேற்கொள்ள இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இது வரை குடும்பநலத் திட்டத்தில் பெறப்பட்ட நன்மைகளைச் சிறந்த முன்னேற்றத்திற்கு ஓர் உறுதியான அடிப்படை யாக மாற்றுவதற்கான முயற் சிகள் இம்மாதத்தில் மேற் கொள்ளப்படும்.

மத்திய சுகாதார, குடும்ப நல அமைச்சகத்தின் செய லாளர் திரு ஜயப்பிரகாஷ், மாநிலத் தலைமைச் செய லாளர்களுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், "குடும்ப நல இயக்கத்தின் நன்மைகளின் அடிப்படையில் இத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான முக்கிய வழிமுறைகளை இந்த மாதத்தில் மாநிலங்கள் ஆராய வேண்டும்," என்று ஆலோசனை கூறியுள்ளார்.

"அறுவைச் சிகிச்சைக்கான குறியளவை நாம் ஏற்கெனவே தாண்டியிருப்பதால் அடுத்த மாதத்தில் இதர குடும்பநல முறைகளில் கவனம் செலுத்த வேண்டும். குடும்பநல அறு வைச் சிகிச்சை செய்து கொண்டவர்களை, குடும்பநலத் துறையின் எல்லா ஊழியர் களும், மற்றவர்களும் சந்தித்து, கருத்தடை அறுவைச் சிகிச் சைக்குப் பிறகு ஏதாவது பிரச் சினைகள் ஏற்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறியவேண் டும். அவர்களுக்கு அத்தகைய பிரச்சினைகள் ஏதேனும் இருந்தால் அவைகள் உட னடியாகக் கவனிக்கப்பட வேண்டும். இதன் மூலம் குடும்பநலத் திட்டத்தை ஏற் றுக் கொண்டவர்களின் மனத் தில் ஒரு நம்பிக்கையையும், திருப்தியையும் ஏற்படுத்த முடியும். தேவைப்படும் இடங் களில் மாவட்ட அரசு மருத் துவ மனைகளில் அரசுச் செல வில் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யலாம் என்று திரு ஜயப் பிரகாஷ் குறிப்பிட்டுள்ளார்.





# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!





| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெருத பிற பணிகளுக்கு | 3.50 | |









வேலை நேரம் : உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!





வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.